

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்
## மார்கழி – தை

மலர் 12 ஜனவரி 2023 இதழ் 1

பொருளடக்கம்


| | |
|---|---|
| ப்ரார்த்தனை | 3 |
| ஆசிரியர் பக்கம் | 4 |
| வண்டு ஸ்தோத்ரம் | 6 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 8 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| அனுக்கிரஹ பாஷணம் | 12 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| பக்த மீராவின் கிருஷ்ண கீதங்கள் | 15 |
| தை மாத விசேஷ தினங்கள் | 16 |
| பக்த சிரியலா | 17 |
| அத்வைத ஆசார்ய பரம்பரை | 20 |
| முகாம் நிகழ்ச்சிகள் | 26 |
| சாணக்ய ஸுபாஷிதம் | 28 |
| ஸ்ரீ பால போத ஸங்க்ரஹம் | 30 |
| அத்வைதமே பரமரகசியம் | 35 |
| வேதாந்த ஸம்வத்ஸரம் | 37 |
| புராணக் கதை | 41 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரீ | 43 |
| மகாபாரத சுருக்கம் | 45 |
| சிவமானஸிக பூஜை | 47 |


भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।



Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


நிர்வாகக் குழு

ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்

டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்





# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

கௌரவ தலைமை ஆசிரியர் :

டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்

டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்

ஸ்ரீ T.N. ராமசந்திரன்

ஸ்ரீ T.S. ராகவன்

பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.

ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா

வெளியிடுவோர் :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்

அலுவலக முகவரி :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் – 631502.
தொலைபேசி : 044 – 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com

சந்தா விவரம்

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |

Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jai Ganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।

कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ப்ரார்த்தனை
# प्रार्थना

*''அசையும் பொருள்களுக்கும், அசையாப் பொருள்களுக்கும் ஆத்மாவாகிய அந்த ஸூர்யன், விண், மண், அந்தரிக்ஷம் அனைத்தையும் வ்யாபிக்கிறார். கிழக்கில் உதித்து தேவர்களுக்கு நன்மை செய்பவரும், கண் போன்றவருமான அந்த ஜோதி மண்டலத்தை நூறாண்டுகள் பார்ப்போமாக.*

*நூறாண்டுகள் பந்துக்களுடன் குலாவுவோமாக*
*நூறாண்டுகள் மகிழ்வோமாக நூறாண்டுகள் கீர்த்தியுடன் இருப்போமாக*
*நூறாண்டுகள் இனியதைக் கேட்போமாக, நூறாண்டுகள் இனியதைப் பேசுவோமாக*
*நூறாண்டுகள் ஜயிக்கப்படாதவர்களாய் விளங்குவோமாக*

*[க்ருஷ்ண யஜுர் வேதம்]*

*நூறாண்டுகள் பார்ப்போமாக, நூறாண்டுகள் வாழ்வோமாக*
*நூறாண்டுகள் புத்தியுடனிருப்போமாக, நூறாண்டுகள் வளர்வோமாக*
*நூறாண்டுகள் புஷ்டியுடன் இருப்போமாக, நூறாண்டுகள் மீண்டும் இருப்போமாக*
*நூறாண்டுகள் கடந்தும் ஸ்திரமாக இருப்போமாக''*

*[அதர்வண வேதம்]*

## தை மாத உழவு

*கலப்பைகளை இணையுங்கள், நுகத்தடிகளை விசாலமாக்குங்கள், பீஜத்தைத் தெளியுங்கள், பக்குவதான்யத்தைப் பற்றுங்கள். இந்த்ரன் நுகத்தடியைக் கீழே அழுத்துபவனாக, பூஷண் அதைப் பாலனம் செய்வானாக, பால் நோரைந்த அது ஒவ்வொரு வருடமும் எமக்குப் பாலைப் பொழிக.*

*காளைகள் ஜயமுடன் செல்க, மனிதர்கள் ஜயமுடன் கலப்பை உழுக, கயிறுகள் ஜயமுடன் கட்டப்படட்டும், ஜயமுடன் சாட்டையும் உயர்த்தப்படட்டும். சீதையே நாம் உன்னைப் போற்றுகிறோம். நீ எமக்கு நல் மனம் செய், நீ எமக்கு நற்பயன் அளி. ஸௌபாக்யமுள்ளவளே இங்கு எம்மை நோக்கு. மருத்துக்களாலும் விஸ்வேதேவர்களாலும் அங்கீகாரமாகி தேனாலும் நெய்யாலும் உழவுச்சாலை நனைக்கப்பட்டுள்ளது. ஏ சாலையே பாலோடு புஷ்டி மிகுந்து நெய் வழிந்து பொங்கி எங்களை நோக்கு.''*

அதர்வண வேதம்

# ஆசிரியர் பக்கம்

சமீபகாலமாக மனு தர்மசாஸ்த்ரம் பற்றி மட்ட ரகமாக விமர்சனம் செய்யப்படுகிறது. இப்போது மட்டுமல்ல பல காலமாக நடந்து வருவதுதான். 'மனதில் உள்ளுவரோ மனுவாதி ஒருலகத்துக்கு ஒரு நீதி'' என்று விமர்சிக்கப்பட்டு வந்தது. இதை எதிர்த்து சிலர் அது வழக்கத்திலேயே இல்லை, எதற்கு அதை விமர்சிக்க வேண்டும் என்று கூறுகின்றனர். ப்ரிட்டிஷ்காரன் செய்த மொழி பெயர்ப்பு சரியானது அல்ல. இப்படி சிலர் இவர்கள் யாரும் மனு தர்மத்தை படித்தவர்கள் அல்லர்.

பொதுவாக ஸ்ருதிக்குப் பிறகு ஸ்ம்ருதி என்னும் தர்ம சாஸ்த்ரங்கள் மனிதனுக்கு நற்பாதையைக் காட்டுகின்றன. ஆபஸ்த்மபர், மனு, யாக்யவல்கியர், கௌதமர், வசிஷ்டர் இப்படிப் பலர் தர்மசாஸ்திரங்களை இயற்றி உள்ளனர். இவர்கள் எல்லோரும் ஏற்பது மனுவையே. 'எதை மனு சொன்னாரோ அது மருந்தாகும்'' என்பது பழமொழி.

வள்ளுவர் ஸாமான்ய தர்மத்தை மட்டும் சொல்ல இவர்கள் ஸாமான்ய, விசேஷ தர்மங்களையும் கூறுவர். இதை பரிமேலழகர் தன் குறள் உரையில் அழகாக கூறுவார். சாமான்ய தர்மங்கள் எல்லோராலும் பின்பற்றப்படவேண்டும். விசேஷ தர்மங்கள் அந்தந்த வர்ணம், ஆஸ்ரமம் இவற்றிற்குத் தகுந்தாற் போல் அனுஷ்டிக்க வேண்டும்.

சமுதாய நலனில் விழைபவராகத்தான் அவர் இருக்கிறார். ஆழமும், வீச்சும் உடையதாக உள்ளது அவர் படைப்பு. இன்றைக்கு கன்யாகுமரியிலிருந்து காஸ்மீரம் வரையில் உள்ள மக்கள் அனைவரும் அவர் காட்டிய வழியில்தான் செல்கின்றனர் என்றால் மிகையாகாது. மக்கள் செய்யும் அனைத்துச் சடங்குகள் அனைத்தும் அவர் காட்டியதுதான். காலை எழுவதிலிருந்து உறங்கப்போகும் வரையிலும் பிறப்பிலிருந்து இறப்புவரையிலும் மாணவர்களாகிய நாம் அவர் காட்டிய வழியிலேயே தான் சென்று கொண்டிருக்கிறோம். அது மட்டுமல்ல ராஜ நீதியை மிகச்சிறப்பாகக் காட்டியவர். பஞ்சாயத்து ராஜின் பிதாமகர். பஞ்ச மகா யக்யத்தை உலகுக்கு அருளியவர். அவர் அருளியது மருந்து. கசக்கத்தான் கசக்கும். ஸாமான்ய தர்மங்கள் எளிதானவை. விசேஷ தர்மங்கள் கடினமானவை. வள்ளுவர் போலவே மனுவுக்கும் அறம் பெரியதே. அவரை விமர்சிக்கலாம். ஆனால் மட்டமாகப் பேசக் கூடாது. நம் நாடு மற்றுமின்றி பல கீழை நாடுகள் மனுதர்மத்தைப் பின்பற்றுகின்றன. ''குதர மானவா' குல வம்ச'' என்பவை சில சான்றுகள். பர்மா, தாய்லாந்து, இலங்கை, மலேஷியா, இண்டோனேஷியா, பெர்சியா,

போன்ற நாடுகளில் இன்றும் நீதி பரிபாலனம் மனு தர்மத்தை ஆதாரமாகக் கொண்டதே. மாணவராகிய நாம் முதலில் அவரை புரிந்து கொள்வோம், மேன்மையுறுவோம்.

இவ்விதழ் உங்கள் கையில் இருக்கும்போது ப்ரதீபத்திற்கு 12 வயதாகிறது. இவ்விதழில் சில புதிய அம்சங்களை சேர்த்திருக்கிறோம். 'ஸ்ரீ சுப்பராய சர்மா அவர்கள் தொகுத்த வேதாந்த ஸம்வத்சரம்' என்னும் நூலை அனைவரும் வேதாந்தத்தை அனுஸந்தானம் செய்ய இரண்டு மூன்று பக்க அளவில் அச்சிடுகிறோம். மேலும் மீராவின் பக்தி கீதங்களை வெளியிடுகிறோம். புராணக்கதையில் ஒரு மாற்றம் என்று சில.

வாசகர்கள் இன்னும் பல புதிய வாசகர்களை சேர்த்து ப்ரதீபத்தை ப்ரகாசமாக்க வேண்டும் என்று கூறி இவ்விதழை ஸ்ரீ சரணர்களின் பொற்பாதத்தில் ஸமர்ப்பிக்கிறோம்.

ஜய ஜய சங்கர! ஹர ஹர சங்கர!

## வேத ரக்ஷண நிதிக்கு பணம் அனுப்ப வேண்டிய தகவல்கள்

### VEDA RAKSHANA NIDHI TRUST

**ICICI Bank** T. Nagar, Chennai 17, A/C. No. 602 601205 431

**IFSC Code :** ICIC 0006026

**Bank of Baroda** A/C No. 05320100002089 IFSC CODE barb0chenbs

**Indian Bank,** West Mambalam A/C. No. 418622532 IFSC IDIB 000w005

**Canara Bank,** West Mambalam A/C No. 0917101041732 IFSC CNRB 0002616

**Indian Bank** Mutt Branch, Kancheepuram

A/C No. 411552514 IFSC IDIB b0005085

பண உதவி செய்பவர்கள் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் அனுப்பலாம். செலுத்துபவர் அவருடைய PAN NO ஐயும், கோத்ரம், நக்ஷத்ரம், செல் போன் எண் முதலியவைகளை ட்ரஸ்டுக்குத் தெரிவிக்கவும்.


வேத ரக்ஷண நிதிக்குப் பணம் அனுப்புவர்கள் விவரத்தை கீழ்கண்ட இ. மெயிலுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

Vrnt e.mail : office@vrnt.org <mailto:office@vrnt.org> phone : 24740549

# வண்டு ஸ்தோத்ரம்

**ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்**

# க்ருஷ்ண பக்தர்களான அத்வைதிகள்



'ஆநந்த மந்தாகிநி ஸ்தோத்ரம்' என்று க்ருஷ்ணன் மேல் நூற்றுக்கு மேல் ச்லோகம் செய்து குணாநுபவ ஆனந்தத்தைக் கொட்டியிருக்கிறார்.

'அத்வைத தத்வமானது, த்வைத தத்வமாவது ?' என்கிற மாதிரி ஒரே இடத்தில் 'எனக்கு க்ருஷ்ணனைத் தவிர வேறு ஒரு தத்வமும் தெரியவில்லை'

**க்ருஷ்ணாத் பரம் கிமபி தத்வம் அஹம் ந ஜாநே**

என்று அவர் சொல்லியிருக்கிறார்.

'த்யாநாப்யாஸ' என்று ஆரம்பிக்கிற ஒரு ச்லோகத்தில் யோகிகள் மனஸை அடக்கி' உள்ளுக்குள்ளே நிர்குணமாக, நிஷ்க்ரியமாக (கார்யம் இல்லாததாக) உள்ள ஏதோ ஒரு ஜ்யோதிஸை (ஜோதியை)ப் பார்க்கிறார்களென்றால் நன்றாகப் பார்த்துவிட்டுப் போகட்டும் ! நம்மால் அப்படி த்யான அப்யாஸம் பண்ணி, மனஸை அடக்கி ஜ்யோதி தர்சனம் செய்ய முடியவில்லையே என்று அழ வேண்டாம் ! அந்த ஜ்யோதி நமக்கு வேண்டாம் ! அதே ஜ்யோதி நல்ல நீல ஒளியாக இந்த யமுனா நதிக்கரையில் ஓடி விளையாடுகிறதல்லவா? (க்ருஷ்ண பரமாத்மாவைத்தான் சொல்கிறார்) இதையே நாம் பார்த்துக் கொண்டிருப்போம் ! இது நம் கண்களுக்கு ஆனந்தமூட்டுவதாக, சிரஞ்ஜீவியாக இருந்து கொண்டிருக்கட்டும் என்கிறார்.

எல்லாவற்றையும் விட்டு விட்டுப் பரமாத்மாவைப் பிடித்த பிறகு, எல்லாவற்றிலும் அந்த பரமாத்மாதான் இருக்கிறது; எல்லாமாகவும் அந்த பரமாத்மாவில்தான் இருக்கிறது; எல்லாமாகவும் அந்த பரமாத்மாவே தான் இருக்கிறது என்று அநுபவ பூர்வமாகத் தெரிந்து விடுவதால் எதையும் விடவேண்டிய அவச்யம் இருப்பதில்லை. இந்த நிலையில்தான்

அத்வைதிகள் ஸகுண ப்ரஹ்மத்தை ஸ்தோத்திரம் செய்வது ‘வாஸ்தவத்தில் பிரிவு இல்லையே ! ’ பிரிவு மாதிரி இருப்பது விளையாட்டுத் தானே? நாமும் தான் பக்தனாகப் பிரிந்திருந்து ஸகுணத்தை ரஸிக்கலாமே ! என்று இருக்கிறார்கள்.

அப்படித்தான் ஆசார்யாளும் குண மந்திர, ஸுந்தர வதநாரவிந்த என்று குண, ரூபங்களை ஸ்துதிக்கிறார்.

எல்லா குணமும் குடிக் கொண்டிருப்பதாலே, ஒரு குணமும் இல்லாத நிர்குண ப்ரஹ்மமாக பகவான் இருக்கிறான் என்பது தான் ‘குண மந்திர’ என்பதற்கு அர்த்தம். ஒரு குணமோ, அல்லது சில குணங்களோ மட்டும் பகவானுக்கு இருப்பதாகச் சொன்னால் அவன் நிர்குணம் இல்லை. இந்த ஒருசில குணங்களுக்குள்ளேயே கட்டுப்பட்டிருக்கிறான் என்று ஆகும். ஒருத்தன் வெளுப்பாயிருக்கிறான் என்று சொன்னால் அவன் வெள்ளை கலர் மட்டும் உள்ளவன் என்று அர்த்தம். ஒருத்தன் வெள்ளையாகவும் இருக்கிறான், கறுப்பாயும் இருக்கிறான், பச்சையாகவும் இருக்கிறான் என்று சில கலர்களை மட்டும் சொல்லி நிறுத்தினாலும் அவன் அந்தச் சில கலர்கள் மட்டுமே என்றாகும். ஆனால் ஒருத்தன் இன்னம் மற்ற எல்லாக் கலர்களாகவும் இருக்கிறான் என்றால் என்ன ஆகும்? அவன் வாஸ்தவத்தில் இவற்றில் எந்தக் கலருமே இல்லை; ஒரு கலருமே இல்லாமலிருக்கிறவன்; ஒவ்வொரு ஸமயத்தில் இப்படி ஒவ்வொரு கலராகத் தெரிகிறவன் - என்று தானே ஆகும்? இப்படியேதான் நல்லது - கெட்டது, அழகானது - அழகில்லாதது, புண்யம் - பாபம், தர்மம் - அதர்மம் முதலிய எல்லாக் குணங்களுமாக குணமந்திரமாக பகவான் இருக்கிறான் என்பதாலேயே அவன் வாஸ்தவத்தில் இந்த எதுவுமில்லை; அப்படிப்பட்ட நிர்குணமாக இருந்து கொண்டே இப்படிப் பல குணங்களுள்ளவனாகத் தெரிகிறான் என்பதுதான் தாத்பர்யமாகும்.

நமக்குப் பிடித்த மாதிரி, நாம் ப்ரீதியோடு, பக்தியோடு நினைத்து உருகுகிற மாதிரி, அரூபமான அவனே அழகான ரூபத்தோடு வருகிறான். ‘ஸுந்தர வதநாரவிந்த’ என்று ஆசார்யாள், தாமரைத் திருமுகத்தோடு கூடிய இந்த அழகு ரூபத்தைச் சொல்கிறார்.

அரூபத்துக்கு ரூபம் வந்தவுடனேயே, பெரியல்லாத அதற்குப் பெயரும் வந்துவிடுகிறது. நாம - ரூபம் என்று சேர்த்துச் சொல்வது போல் உருவம் வந்தவுடன் பேரும் வேண்டும். ‘கோவிந்த’ என்று பேர் சொல்லிக் கூப்பிடுகிறார் ஆசார்யாள்:

**ஸுந்தர - வதநாரவிந்த கோவிந்த**

(தொடரும்)

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

# படிப்பும் பண்பாடும்

**அம்மையே அப்பா ஒப்பில்லா மணியே**
**தாயும் நீயே தந்தையும் நீயே ....**


ஒவ்வொரு குடும்பத்திற்கும் தாயும், தந்தையும் இருப்பது போல, உலகத்துக்கே தாயாகவும், தந்தையுமாக இருப்பவர் கடவுள் என்று கூறுகிறோம்.

'அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிது' என்ற பழமொழிக்கு ஏற்ப நாம் மனிதப் பிறவி எடுத்திருக்கிறோம். மற்ற ஜீவராசிகளுக்கு இல்லாத சிறப்பு நம் மனிதப் பிறவிக்கு வந்திருக்கிறது.

மனிதன் ஆற்றல் உள்ளவன், பக்தி உள்ளவன், நேர்மை உள்ளவன் என்று பாராட்டப்படுபவன்.

பண்பாடு இல்லாத படிப்பு உதவாது. என்ன படித்து, என்ன பிரயோசனம்? என்பார்கள்.

படிப்பின் அடிப்படையே நல்ல பண்பாடுதான் நல்ல குணமும், நல்ல சிந்தனையும் தருவது படிப்பு, படிப்பு புத்தி மூலம் வளரக்கூடியது, பண்பாட்டைப் பழக்கத்தின் மூலம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.



பண்பாடு இல்லாத படிப்பு எதற்கு? படிப்பதன் மூலம் நல்ல வழிசென்று நல்ல காரியத்தைச் செய்ய வேண்டும்.

கல்வி ஸ்தாபனங்களின் முக்கிய நோக்கமே வெறும் படிப்பைச் சொல்லித் தருவது மட்டுமல்ல, படிப்போடு படித்தபடி நடக்கவும் வைப்பதாகும்.

விஞ்ஞானி ஆகுங்கள், டாக்டர் ஆகுங்கள், எஞ்சினியர் ஆகுங்கள் இது உங்கள் இஷ்டம்.

எல்லாருமே விஞ்ஞானிகள் ஆனால் உலகம் கெட்டுவிடும். எல்லாருமே டாக்டர்

ஆனாலும் உலகம் கெட்டுவிடும். எல்லாரும் எஞ்சினியர் ஆனாலும் உலகம் தாங்காது.

பல சமாச்சாரங்கள் இருக்க வேண்டும். பல வழிகளிலும் நாடு முன்னேற வேண்டும். நீங்களும் முன்னேற வேண்டும்.

அப்படிப் பெரியவர்களாகும்போது, நமக்குப் 'பிரமோஷன்' கிடைக்கும் படியாக நம்முடைய நடவடிக்கைகள் இருக்க வேண்டும்.

நாங்கள் எல்லாம் சின்ன வயதில் படிக்கும் போது கணக்கில் மார்க் குறையும். அதை எப்படி செய்வார்கள் என்றால், தினப்படி ஒழுங்காக வகுப்புக்கு வந்தானா? ஒழுக்கமாக, பண்பாக நடந்து கொண்டானா என்பதைப் பார்த்து, அதற்கு என்று தனியாக ஒரு மார்க்கு போடுவார்கள்.

நல்ல பண்பாடு வளர வேண்டும் என்பதற்காக அந்தக் காலத்தில் அப்படிப் பண்ணினார்கள். அப்படிச் சின்ன வயசிலேயே பண்பாடோடு வளர்ந்தால் பிற்காலத்தில் மிகப்பெரிய பெருமைகள் கிடைக்கும்.

வெறும் புறக்கல்வியாக இல்லாமல், அகத்தில் நல்ல பண்பாட்டை, நல்ல கலாச்சாரத்தைப் போதிக்கும் கல்வியாக இருக்க வேண்டும். நல்ல குணத்தோடு படித்தால் அவன் ஒழுக்கமுள்ளவனாக வளர்வான். அதற்கு அடிப்படை நம்முடைய கலாச்சாரம், பண்பாடு. நல்ல பண்பாடு இல்லாவிட்டால் அவன் நூறு மார்க்கு வாங்கினால் கூடப் பிரயோஜனம் இல்லை.

வெளிநாட்டிலிருந்து நிறைய பாடத் திட்டங்கள் வந்து அவற்றை நாம் படித்துக் கொண்டு இருந்தாலும், நம்முடைய பண்பாட்டை, கலாசாரத்தை விட்டுவிடாமல் வளர்த்துக் கொண்டு வர வேண்டும்.

புத்தியிலே அறிவாளியாகவும், உணவு, உடை, பழக்க வழக்கங்களில் நம்முடைய இந்திய கலாச்சாரம் உடையவர்களாகவும் இருக்க வேண்டும்.

இப்படி இருந்தால் நாம் முன்னேற முடியும். அப்படி முன்னேறியவர்தான் நம்முடைய ஜனாதிபதி அப்துல்கலாம்.

அவர் எவ்வளவு படித்தவராக இருந்தாலும் கூட நமது பண்பாடு, கலாச்சாரத்தைக் கைவிடாதவர்.

அதுபோல எந்தத் துறையில் படித்து முன்னேறினாலும் நம்முடைய இந்தியப் பண்பாடுகளை கைவிட்டு விடாமல் கடைப்பிடிக்க வேண்டும்.

விதை போட்டால் மட்டும் போதாது. விதையோடு நீர் விட வேண்டும்; களைகளைப் பிடுங்க வேண்டும்; உரம் இட வேண்டும்; பாதுகாக்க வேண்டும். அதிலே அப்படி இப்படி என்று நிறைய வேலைகள் இருக்கிறது.

அதுபோல நல்லாசிகளை நாங்கள் இங்கே விதை போல தந்துவிட்டுப் போகிறோம். அவற்றைக் காப்பாற்றி வளர்ப்பதற்கு, அதற்கு மாறான குணங்கள், செயல்களையெல்லாம் நீக்கிவிட வேண்டும்.

தீய களைகளையெல்லாம் போக்கினால்தானே பயிர் நன்றாக வளரும்? இல்லாவிட்டால் நாம் போடும் அத்தனை உரங்களும் களைகளுக்கே போய்விடும்.

அதனால்தான் விவசாயத்தில் முதலில் களை எடுக்கிறார்கள். களை எடுத்தால்தான் நல்ல பயிர் வளரும்.

கெட்ட குணம் போவதற்குத் தீவிர முயற்சி செய்ய வேண்டும். அதற்கு தவம் செய்வது போலப் படிக்க வேண்டும்.

தவம் செய்யும் போது எப்படி இறைவனது அருள் கிடைக்குமோ, அதுபோல படிக்கும் போதும் எதிர் காலம் பயன் உள்ளதாக அமையும்.

நல்ல மேதாவிகளாக விளங்குவீர்கள். இந்த வயதில் படித்தால்தான் உண்டு. படிக்கும் வயதில் உற்சாகம் இருக்கும். அது கடந்து போய்விட்டால் சோம்பேறித் தனம் வந்துவிடும்.

மாணவர்கள் அவ்வப்போது கூடி கூடிப் பேசிப் படிக்க வேண்டும். அப்போதுதான் அவர்களுக்குப் புரியும்.

ஒரு கல்லூரியைக் கட்டுவதற்கு, ஒரு தொழிற் சாலையைக் கட்டுவது போல செலவு செய்ய வேண்டும்.

நாங்கள் காஞ்சிபுரத்திலே ஒரு பல்கலைக்கழகம் கட்டியிருக்கிறோம். அந்த மாதிரி கோடிகோடியாகச் செலவு பண்ணி எதற்கு கல்வி நிறுவனங்களைக் கட்டுகிறார்கள்? நல்ல மாணவர்கள் உருவாக வேண்டும், நாட்டை முன்னேற்ற வேண்டும் என்பதற்காகத் தான்.

அதற்கு ஆதாரமாக நீங்கள் எல்லாம் நல்ல ஆசிரியர்களாக, நல்ல மாணவர்களாக உருவாக வேண்டும். நல்லாசிரியர் விருதுகளை அதற்குத்தான் வழங்குகிறார்கள்.

ஆசிரியர் எல்லோரும் மாணவர்களோடு இணைந்து அவர்களுக்கு ஒத்தாசை பண்ணி, ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் உள்ள இடை வெளியைக் குறைத்து, அவர்களது சந்தேகங்களை நீக்கி, அவர்கள் முன்னேற உதவ வேண்டும்.

அப்படிப்பட்ட வகையில் கல்வி நிறுவனங்கள் ஓங்கி வளர்ந்து எல்லோருக்கும் பயன்பட வேண்டும் என்று கூறி ஆசி வழங்கி விடைபெறுகிறோம்.

ஜெய ஜெய சங்கர
ஹர ஹர சங்கர

# கல்வியும் கலாச்சாரமும்

ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் கடவுள் பக்தியும், சமுதாயப் பணியும் இருக்க வேண்டும்.

கடவுள் பக்தி சாந்தியைக் கொடுக்கும். வலிமையைக் கொடுக்கும். பொருள் எல்லாம் கொடுக்கும். அந்தப் பொருளை வைத்துக் கொண்டு சமுதாயத்திற்குத் தேவையான பணிகளை எல்லாம் செய்ய வேண்டும்.

வெறும் பொருளால் எந்த காரியமும் ஆகாது. அருளோடு கூடிய பொருளால் தான் எல்லாச் சிறப்புகளும் கிடைக்கும்.

**பொருள் இல்லார்க்கு இவ்வுலகு இல்லை**
**அருள்இல்லார்க்கு அவ்வுலகு இல்லை ....**

பொருளும், அருளும் இந்த உலகத்திற்கு மிகவும் அத்தியாவசியத் தேவைகள்.

ஒவ்வொவரும் தெய்வப் பணியும், சமுதாயப் பணியும் கொண்டு சீரும் சிறப்புடனும் வாழ ஆசி கூறுகிறோம்.

ஜெய ஜெய சங்கர
ஹர ஹர சங்கர




வாசகர்களுக்கு
மகரசங்கராந்தி
தின
வாழ்த்துக்கள்

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

*கோதாவரி நதிக் கரையில் 20/12/2022 ஆற்றிய அருளுரை*



(இன்று கோதாவரி நதிக் கரையில் ஆரத்தி நடைபெற்றது. பின் பெரியவா ரிக், யஜுர், ஸாம, வேத வித்யார்த்திகளுக்கு சன்மானம் அளித்தார். அச்சமயம் பெரியவா ஆற்றிய அருளுரை).

சந்தியா சமய காலாத்தில் நல்ல காரியம் செய்தார்கள் (கோதாவரி நதிக்கரையில் தீபார்த்தி)சந்தியா சமயத்தில், கோதாவரி ஆரத்தி சமயம் -அங்கு நீரின் பிரவாகம் பார்க்கிறோம். இங்கே சாம கானப்ராவாகம். இங்கே ஒரு பத்து வேத பூர்த்தி செய்த வித்யார்த்திகளுக்கு பரிசு அளிக்கிறார்கள்.

ஒரு டிரஸ்ட் மூலம், பத்து லட்சம் முதல் அன்பளிப்பு தருகிறார்கள். ஒவ்வொருவருக்கும் அன்பளிப்பு தருகிறார்கள். இவர்கள் வேதம் படித்துவிட்டு, நமது தேசம் முன், நமது கலாசாரம், நமது பண்பாடு, நமது தர்மம், நமது நம்பிக்கை, நமது சாகித்யம், நமது கோவில்கள், நமது கோபுரங்கள்; காஞ்சியில் தடாகப் பிரதிஷ்டை செய்தோம். அங்கு மணி மண்டபம் என்று ஒன்று உள்ளது. அங்கு தடாகப் பிரதிஷ்டை செய்தோம். தாடங்கப் பிரதிஷ்டை என்று நீங்கள் கேட்டிருப்பீர்கள். கர்ண பூஷணம். அது ஸ்ரீ சக்கர ரூபத்தில் உள்ளது. அகிலாண்டேஸ்வரி அம்பாளுக்கு தாடங்கப் பிரதிஷ்டை நடைபெறுகிறது.

தடாகப் பிரதிஷ்டை. அறுபத்தி நான்கு ஹோமம் செய்து, அதில் (நீரில்) உள்ள பிரதிமை செய்து, தங்கம், வெள்ளியில் செய்து, நீரில் என்ன வசிக்கிறதோ, அதன் பிரதிமை செய்து, நீரில் இருந்து வெளியில் வரும் ஒரு

ஐந்துவின் பிரதிமை வைத்து, பதிமூன்று கலசம் பிரதிஷ்டை செய்வது ஒரு காரியக் க்ரமம். இதற்கு அப்படி பிரதிஷ்டை செய்தோம்.

சமுதாய சேவை நமது தர்மத்தில் இல்லை என்பதில்லை. நமது தர்மமே ஒரு சமாஜம். இந்து தர்மத்தில் சமுதாய சேவை அனைத்தும் உள்ளது. அன்னதானம் என்று கூறியவர்கள் யார்? நமது மக்களே. சத்திரம் கட்டியவர்கள் யார்? நமது மக்களே. செடி வைத்தவர்கள் யார்? அனைவருக்கும் உதவ வேண்டும் என்பது நமது சமுதாயத்தில் உள்ளது. அவ்வாறு இருக்கும் போது, நமக்கு ஞானம் முக்கியம்.

ஞானத்தின் சிகரமாய் உள்ளது, ஞானத்தின் கிரீடமாய் உள்ளது இந்த வேதங்கள். வேதம் என்பதே ஞானம். பல பண்டிதர்கள் இங்கு வருகிறார்கள், கோதாவரி பிராந்தியத்தில் திருமலை திருப்பதி தேவஸ்தானம் மூலம் படிக்கும் வேத பண்டிதர்கள் இங்கு வந்து, இன்று காஞ்சி மஹா ஸ்வாமிகளின் ஆராதனையில் பங்கேற்றுக் கொண்டு, அனைவரும் வேத ஸ்வஸ்தி சொல்லி, இன்று உதயம் முதல் கோ பூஜை, மற்றும் சந்திர மௌலீச்வர பூஜை நடைபெற்றதை கண்டீர்கள். இங்கே வந்துள்ளவர்கள் சின்ன வயதிலே வேதம் பயின்று, சிறிய வயதில் இவரின் தாத்தா சேவை செய்தார்கள். இவரின் தந்தை வேலை செய்தார்கள். அனைவரும் சேவை செய்கிறார்கள். இவர்களின் அண்ணன் தம்பிகள் அனைவரும் படித்து, கனபாடிகளாக உள்ளார்கள். காசிக்கு சென்று புத்தகம் பார்க்காமல் படித்தார்கள். காசியில் ஒரு பரிக்ஷை உண்டு. புஸ்தகம் பார்க்காமல் சொல்ல வேண்டும். வேதம் முழுவதும் சொன்னால், காசியில் விசேஷ பரிக்ஷையில், மிக சிறந்த கௌரவம் அளிப்பது மூலம், இவரின் பெயர் சூரிய கனபாடிகள். இவர் பரிக்ஷை அதிகாரியாக இருந்து, young scientist போல், young கனபாடிகள் தயார் செய்தார். கொவ்வூரில் அனைவரும் வந்து, மிகப் பெரிய வைபவமாக இன்று ஆராதனை நடந்தது.

நாளை சுவாசினி பூஜை - அஷ்டோத்திர பூஜை நடைபெறவுள்ளது. நாளை மாலை பிரதோஷ பூஜை, திரியோதஷி பூஜை விசேஷமாக நடைபெறும். பின் சுக்ரவார பூஜை உள்ளது. பின் சனிக்கிழமை பகல் வரை இங்கு இருந்து பிறகு விசாகபட்டினம் பிரயாணம் உள்ளது. இந்த கோஷ்பத க்ஷேத்திரம் சம்ஸ்கிரித கேந்திரம் கீழ். முக்கமல்லாவில் பிரம்ம சூத்திரம் நடைபெற்றது. கொவ்வூரில் சம்ஸ்க்ருதி சப்தாகம் நடைபெறுகிறது. பகவத் கீதா யக்னம் நடைபெற்றது. வட பகுதியில் பண்டாரா என்பார்கள். வந்தவர்களுக்கு பிரசாதம் தருதல், அனைவரும் அமர்ந்து கேட்டல். எவருக்கு எந்த விதமான இருக்கை தேவையோ, அதை வசதிபடுத்தி தந்தார்கள். எவருக்கு எந்த வசதி தேவையோ, அதை அளித்தார்கள். ஒவ்வொரு ஊரில் இருந்தும் வந்தவர்களுக்கு, ஒவ்வொரு அத்தியாயம் பாராயணம் செய்ய வாய்ப்பு கிடைத்தது.


அதன் மூலம், நல்லவிதமாக சேவை செய்தார்கள்.

பகவத் கீதா யக்னம் நன்றாக நடந்தது. ஞான யக்னம் செய்தார்கள். நாளை மேலும் சில கலாசார கார்யம் நடைபெறவுள்ளது. வேத ஸ்வஸ்தி நாளை, மற்றும் மறுநாள் நடைபெறவுள்ளது. நாளை, மற்றும் மறுநாள், திருப்பதி வேத பாடசாலையில் இருந்து வேத பாராயணம் செய்கிறார்கள். இன்று மஹா ஸ்வாமிகளின் ஆராதனை. நாளை மஹா ஸ்வாமிகளின் அனுராதா நக்ஷத்திரம். அவரின் நக்ஷத்திரம். நாளை மறுநாள் மகராயனம். உத்திராயணம் மிக பிரசித்தியானது என்றாலும், இது சிறிது முன் வருகின்றது. மகராயன புண்ணிய காலம் இங்கு நடைபெறுகிறது. அன்று ஸ்நானம் முக்கியம். நீங்கள் அனைவரும் நன்றாகச் செய்தீர்கள். கோதாவரி தாய், மற்றும் காமாக்ஷி அம்பாளின் அருளால் நன்றாக நடைபெறுகிறது. இம்மாதிரியான குரு பக்தி, பிரயர்த்தனம் தேவை. முயற்சி தேவை. அனைவருக்கும் மன பலம், அனைவரும் சேர்ந்து உற்சாகப்படுத்தும் பலம் தேவை. அதற்கு ஸ்திரமான மனது தேவை. அனைவரும் சேர்ந்து நன்றாக பணி செய்தீர்கள். ரதோற்சவம் நன்றாக செய்தீர்கள்.

***ஹர ஹர சங்கர***


ஸ்ரீ சந்திரமௌலீஸ்வராய நம:

## ஸ்வர்ண ரத சேவா



ஸ்ரீ மடத்தில் ஸ்வர்ண ரத சேவை ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் பிருந்தாவனத்தில் ப்ரதி மாதம் கீழ்கண்ட நக்ஷத்ரங்களில் நடைபெறும்

♦ அனுஷம் ♦ மூலம் ♦ உத்ராடம் ♦ அவிட்டம்

இந்த சேவையில் ரூபாய் 1000 செலுத்தி உபயதாரர்களாக கலந்துகொள்ள விரும்பும் பக்தர்கள் ஸ்ரீமடம் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புக்கு:**
ஸ்ரீமடம் மேனேஜர் - 044 - 27222115, 27222707, 27224236

இப்படிக்கு,
ஸ்ரீமடம் நிர்வாகம்

# பக்த மீராவின் க்ருஷ்ணா கீதங்கள்



**தும‌ரே காரண ஸப் ஸுக சோடா அப்**
**மோஹீ. க்யூம்தரஜாஓ ஹோ**
**பிரஹ பிதா லாகோ உர் அந்தர் ஸோ தும்**
**ஆயே புஜாவோ ஹோ**
**அப் சோடத் நஹீம் பனை ப்ரபுஜீ**
**ஹம்ஸகர் துரந்த புலாஓ ஹோ**
**மீரா தாஸீ ஜனம ஜனம கீ அங்க ஸே**
**அங்க லகாஓ ஹோ**

ஹே கிரிதர் ! உனக்காகவே நான் எல்லா ஸுகத்தையும் விட்டேன். இருந்தும் என்னை ஏன் ஏக்கமாக்குகிறாய்? என் உள்ளத்தில் விரஹத்தின் துன்பம் வாட்டுகிறது. அதைத் தணிக்க எப்போது வருவாய்? நான் உன்னை விடேன். விரைவில் என்னை அழை. இந்த மீரா ஒவ்வொரு ஜன்மத்திலும் உன் அடிமை. உன் அங்கத்தோடு என்னை சேர்த்துக் கொள்.

ராகம் மாண்ட்

**மாஇ மைனேம் கோவிந்த லீனா மோல கோவிந்த லீனா மோல**
**கோஈ கஹே சஸ்தா கோஈ கஹே மஹங்கா லீனோ தரஜூ தோல ந**
**கோஈ கஹெ கர் மே. கோஈ கஹே பன மே. ராதா கே ஸங்க கிலோல**
**மீரா கே ப்ரபு கிரிதர நாகர ஆவத ப்ரேம கெ டோல நச**

அம்மா! நான் பேரம் பேசி இந்த கோவிந்தனை வாங்கினேன். சிலர் மலிவு என்பர், சிலர் அதிகவிலை என்பர். தராசில் நிறுத்துப் பார்த்தேன். சிலர் அவன் வீட்டில் இருப்பான் என்பர். சிலர் காட்டில் இருப்பான் என்பர். ராதையின் காதலன் இந்த மீராவின் நாயகன் கிரிதரன் வரும்போது காதல் ஊசலாடுகிறது.

# தை மாதம்
# ஸ்ரீ மடத்தில் - விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விபரம் |
|---|---|---|
| 15-01-2023 | ஞாயிறு | உத்தராயண புண்ய காலம், தை பொங்கல், மகரஸங்க்ராந்தி - சூர்யநாராயணர் பூஜை |
| 16-01-2023 | திங்கள் | ஸ்வாதி வேத பாராயணம், மாட்டுபொங்கல் |
| 17-01-2023 | செவ்வாய் | அனுஷம் தேர் |
| 18-01-2023 | புதன் | அனுஷம் வேத பாராயணம், ஏகாதசி, புதானுராதா யோகம் |
| 19-01-2023 | வியாழன் | மூலம் தேர், த்வாதசி, ப்ரதோஷ பூஜை |
| 20-01-2023 | வெள்ளி | மூலம் வேத பாராயணம் |
| 21-01-2023 | சனி | தை அமாவாசை, உத்ராடம் வேத பாராயணம் ; உத்ராடம் தேர் |
| 23-01-2023 | திங்கள் | அவிட்டம் தேர் ; அவிட்டம் வேத பாராயணம் |
| 25-01-2023 | புதன் | வஸந்த பஞ்சமி |
| 27-01-2023 | வெள்ளி | ப்ருகு ரேவதி யோகம் |
| 28-01-2023 | சனி | ரதஸப்தமி, பீஷ்மாஷ்டமி |
| 01-02-2023 | புதன் | ஏகாதசி |
| 02-02-2023 | வியாழன் | தில பத்ம த்வாதசி |
| 03-02-2023 | வெள்ளி | ப்ரதோஷ பூஜை |
| 05-02-2023 | ஞாயிறு | தை பூசம், பௌணர்மி பூஜை |
| 20-01-2023; 27-01-2023; 03-02-2023; 10-02-2023 | | வெள்ளிக்கிழமை பூஜை |

# பக்த சிரியலா

முனைவர் பா. காயத்ரி

சிவபெருமானின் பக்தர்களோ எண்ணிலடங்கா. அச்சிறப்புவாய்ந்த பக்தர்களுள் ஒருவர் தான் பக்த சிரியலா. பசுபதியின் மீது அதீத ப்ரேமை கொண்டவர். அவருடைய பக்தியின் கதை பக்தர்களுக்குள் வியப்பு கொண்டு வரத்தக்கது. அவரின் கதையைக் காண்போம்.



காஞ்சிபுரத்தில் சிரியலா என்னும் சிவபக்தர் வாழ்ந்து வந்தார். மிகவும் ஆழ்ந்த சைவ நம்பிக்கை உடையவர். அவருடைய மனைவியின் பெயர் சங்கலவ்வா. இவர்களுக்கு சீராலு என்னும் பெயருடைய ஒரேயொரு புதல்வன் இருந்தான். அவனுக்கு எட்டு வயது இருக்கும்.

சிரியலா தினமும் ஆறு சைவ பக்தர்களை அதிதியாக அழைத்து விருந்தளித்த பிறகே உணவு உண்பார்; இல்லையேல் உணவருந்த மாட்டார். அவர் மனைவியும் அங்ஙனே இருந்தாள். அவர்கள் புதல்வனும் வாழையடி வாழையாய் இருந்தான். சிறுவயதிலேயே மிகுந்த சிவபக்தியோடு திகழ்ந்தான்.

ஒருநாள் பரமேஸ்வரன், தன் பக்தனின் பெருமையை உலகத்தவருக்கு தெரிய வைக்க, சிரியலாவை சோதிக்க முற்பட்டார்.

அந்த நாள் சிரியலாவின் வீட்டிற்கு எந்த சைவ பக்தர்களும் வரவில்லை. சிரியலாவும் தேடிப்போக ஜடாதாரியான ஒரு சிவசாதுவைக் கண்டார். அவர் வேறு

யாரும் இல்லை, சிவபெருமானே சாதுவின் ரூபத்தில் வந்திருந்தார். சிரியலா ஓடிப்போய் அவரை தன் வீட்டுக்கு அதிதியாக வர அழைத்தார். ஆனால் சாதுவோ, ஒரு நிபந்தனை விதித்தார். 'நான் விரும்புகின்ற உணவைப் படைத்தால் மட்டுமே உன் வீட்டிற்கு நான் சாப்பிட வருவேன்' என்று கூறினார். சிரியலா நீங்கள் என்ன சொல்கிறீர்களோ அதையே உங்களுக்கு படைப்போம்' என்று கூற, சாது, 'நிச்சயமாக என்ன கேட்டாலும் தர முடியுமா?' என்று சந்தேகத்துடன் கேட்டார். சிரியலா, 'நீங்கள் ஆணை மட்டும் இடுங்கள், அதை நிறைவேற்றுவதற்காக காத்து நிற்கிறேன் என்று சொல்ல சாதுவோ, எனக்கு சிறு குழந்தையின் மாமிசமே சாப்பாடாக பரிமாற வேண்டும் என்று கூறினார்.

திடுகிட்ட சிரியலா, கண்களில் கண்ணீர் மல்க, எனக்கு எட்டு வயதில் ஒரு புதல்வன் இருக்கிறான். அவனைக் கொன்று, நீங்கள் விரும்பியதை நிச்சயமாக படைப்பேன் என்று கூறி அந்த சாதுவை வீட்டுக்கு அழைத்துச் சென்றான். அவரை வீட்டினுள் ஆசனத்தில் அமர வைத்து உள்ளே போய், வழியில் நடந்தனவற்றைத் தன் மனைவி சங்கலல்வாவிடம் கூறினார். அவளும் தேம்பி அழுது, தன் கணவனிடம் அவர்களது மகன் சீராலுவை பள்ளிக்கூடத்திலிருந்து அழைத்து வரச் சொன்னாள்.

சிரியலாவும் தன் மகனைப் பள்ளியிலிருந்து அழைத்து வீட்டிற்கு திரும்பி வரும் வழி முழுவதும் கண்ணீர் வடித்துக் கொண்டே வந்தார். சீராலுவும் மௌனமாக வீட்டிற்கு திரும்பி அதிதியை கண்டு வணங்கி உள்ளே அம்மாவின் மடியில் அமர்ந்து, அம்மா, 'ஏன் அப்பா அழுகிறார் ?' என்று கேட்க, சங்கலவ்லாவும் கண்ணீர் வடித்து நடந்ததைக் கூறினாள். சீராலுவும் தன் தாயின் கண்ணீரைத் துடைத்து தன் பெற்றோர்களிடம், 'தாயே, தந்தையே இதைவிட ஒரு பெரும் பாக்கியம் எனக்கு கிடைக்குமா!' இவ்வுலகத்தில் பிறந்தாலே இறப்பு என்பது நிச்சயம். இந்த சம்சார சாகரத்தின் இன்னல்களை எதிர்கொண்டு மூப்படைந்து இறப்பதைவிட பகவான் எனக்கு சிறுவயதிலேயே ஒரு சைவ பக்தரின் பசியைப் போக்கி சிவலோகமடைய வழி அருளியுள்ளார். இதற்கு நான் என்ன புண்ணியம் செய்திருப்பேனோ ! வாருங்கள் தந்தையே, சீக்கிரம், ஆகவேண்டியதை பாருங்கள். வந்த அதிதியைப் பசியில் காக்க வைக்கக் கூடாது. நான் முழு மனதுடனும், மகிழ்ச்சியுடனும் வந்த அதிதிக்கு உணவாக, தயராக உள்ளேன் ! என்று சொன்னான்.

அவனுடைய பெற்றோர்களோ இந்த மாதிரி புதல்வனைப் பெற்றதில் மகிழ்வதா இல்லையேல் தன் பிள்ளைச் சாகப்போவதை எண்ணி வருந்துவதா என்று குழம்பினார்கள்.

சிரியலா, ஒருகோடாரியை எடுத்து சீராலுவை வெளியே கொண்டு சென்று ஒரே வெட்டில் இரு துண்டாக வெட்டி, தன் மனைவியிடம் சமைக்க கொடுத்து, அவ்வுணவை அதிதியிக்குப் படைத்தார். அச்சாது உணவைப் பார்த்து, 'தலை எங்கே?' என்று வினவ, சிரியலா, 'அதில் முடி இருப்பதால் சாப்பிட தகாது என்றெண்ணி வைக்கவில்லை' என்று பதிலளித்தான். அச்சாது, சிரியலாவை தன்னோடு அமர்ந்து உணவருந்துமாறும், சங்கலவ்வாவை அவர்களுக்கு உணவு பரிமாறவும் சொல்ல, மனமில்லாமல் அவர்களும் அதற்கு சம்மதித்தனர். உணவு உட்கொள்ளும் முன்பு அச்சாது சங்கலவ்வாவைப் பார்த்து, 'அம்மா, உனக்கு ?' ஒரு புதல்வன் இருக்கிறான் அல்லவா ? 'அவனையும் சாப்பிட கூப்பிடு' என்றார்.

அத்தம்பதிகள் திடுக்கிட்டனர். சிரியலா 'சுவாமி எனக்கு ஒரே ஒரு புதல்வன் தான் இருக்கிறான்.' அவனுடைய மாமிசத்தைத் தான் உங்களுக்கு உணவாக படைத்துள்ளோம் என்று ததும்பி கூற, அச்சாது கோபம் நிறைந்த கண்களால் உற்று பார்த்து, 'இப்போது நீ உன் புல்வனை கூப்பிடவில்லையானால் நான்' உணவருந்த மாட்டேன்' என்று மிரட்டினார். சங்கலவ்வாவோ தன் நிலைமையை நினைத்து ஓ... என்று கூப்பாடு போட்டாள். அச்சாது சங்கலவ்வாவைப் பார்த்து, 'தாயே அழாதீர்கள் உங்கள் புதல்வனின் பெயரை மூன்று முறை சொல்லி கூப்பிடுங்கள்' என்றார். அவளும் 'சீராலூ வா.... சீராலு ..... சீராலு வாப்பா... என் மகனே' என்று கதவருகில் சென்று கூப்பிட, சீராலுவும் 'புது துணியணிந்து அம்மா....' என்று ஓடி வந்தான்.

சங்கலவ்வாவும் என் 'செல்லமே....' என்று கூறி உச்சி முகர்ந்து அணைத்துக் கொண்டாள். சிவபெருமான் தன் நிஜ ரூபத்தைக் காட்டி, அவர்களுக்கு அருளாசி வழங்கி, அவர்கள் மூன்று பேரையும் தன்னோடு கைலாயத்திற்கு அழைத்து சென்றார். இதுவே பக்த சிரியலாவின் பக்தி கதை. நம் வாழ்விலும் பல கஷ்டங்கள் வரலாம். ஆனால் அவை அனைத்தும் பகவான் நமக்கு வைத்திருக்கும் பரீக்ஷை என்றுணர்ந்து, கடவுள் மீது பாரத்தைப் போட்டு, தைரியமாகவும், பக்தியுடனும், தர்மத்தை அனுசரித்தும் அதை நேர்கொண்டால், பகவானின் அருளால் நமக்கு வெற்றி நிச்சயமே!!!

ஓம் நம சிவாய

# அத்வைத ஆச்சார்ய பரம்பரை 1

**ஸதாசிவ ஸமாரம்பாம் சரங்கராசார்ய மத்யமாம் ।**
**அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தேகுரு பரம்பராம் ॥**

கயிலையம் பதியான பரமேச்வரனிடமிருந்து ஆரம்பித்தது அத்வைத தத்வபோதம். இதனால் ஈச்வரேன அத்வைத தத்வப்ரதர்சனத்திற்கு ஆதிகுருவாகக் கருதப்படுகிறார். **ஸகாலே நேஹ மஹதா யோகோ நஷ்ட** என்றபடி காலங்களும், யுகங்களும் பல கடந்தமையாலும், அனுஷ்டிப்பவர்களின் எண்ணிக்கை குறைந்தாலும், கடைப்பிடித்த சிலரிடத்திலும் அபிப்பிராய பேதங்களும் சிரத்தைக் குறைவும் ஏற்பட்டன. **யதா யதா ஹி தர்மஸ்ய க்லானிர்பவதி பாரத! அப்யுத்தானமதர்மஸ்ய ததாத்மானம் ஸ்ருஜாம்யஹம்** என்ற வாக்கியத்திற்கிணங்க வேத வேதாந்தங்களின் அடிப்படைக் கருத்தான அத்வைத தத்வத்தை மேல் நிலைக்குக் கொண்டுவர விரும்பி ஈச்வரன் தானே காலடியில் சிவகுரு ஆர்யாம்பாள் தம்பதியினரிடத்தில் ஸ்ரீ ஆதிசங்கரராக அவதரித்தார். மங்கியும், மயங்கியும் போயிருந்த வைதிக நெறியைச் சீர்ப்படுத்தினார். அத்வைத ஸம்பிரதாயத்திற்குப் புத்துயிர் கொடுத்தார். **அத்வைதமே ஸத்யம்** என்பதை உலகிற்கு எடுத்துச் சொன்னார். ஸத்யமான அத்வைதம் நித்யமாகப் பிரகாசிக்கச் செய்தாராதலின் இவரை நடுவில் வைத்துப் போற்றுகிறோம். **தீபாத் உத்பன்ன ப்ரதீபவத்** என்றபடி அவரால் ஏற்றப்பட்ட வேதாந்த தீபம் தொடர்ந்து வந்த ஆசார்யர்களால் அணையாமல் பாதுகாக்கப்பட்டு வாழையடி வாழையென வந்த அத்வைத ஞானக் கூட்டத்தின் பரம்பரையால் இன்று வரையில் மேன் மேலும் பிரகாசித்துக் கொண்டு வருகிறது. இதனாலேயே மேற்கண்ட சுலோகத்தின் இரண்டாவது வரியில் தொடர்ந்து தொய்வின்றி வந்து கொண்டிருக்கிற ஆசார்ய பரம்பரையின் ஞான தீபங்களாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கிற இன்றைய ஸ்ரீ சரணர்கள் வரையில் போற்றி நமஸ்கரிக்கிறோம்.

ஈச்வரனே முதற்குருவாக வந்து அத்வைத விக்ஞானத்தை உபதேசித்தார் என்பதை வேதம் துவங்கி எல்லா நூல்களும் கூறுகின்றன. இதனாலேயே நாம் இவரையே **ஸதாசிவ ஸமாரம்பாம்** என்று ஆதி குருவாகப் போற்றுகிறோம். ஆதி குருவே ஆதிசங்கரராக அவதரித்து வந்ததால் இடையில் இவரை வணங்குகிறோம். ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதரும் இவரையே ஆதிகுருவாக ஏற்றுத் துதிக்கிறார். **மௌனவ்யாக்யா ப்ரகடித பரப்ரும்ம தத்வம் யுவானம் வர்ஷிஷ்டாந்தே வஸத்ருஷிகணை ராவ்ருதம் ப்ரும்மநிஷ்டம் । ஆசார்யேந்த்ரம் கரகலிதசிந்முத்ரமானந்த மூர்த்திம் ஸ்வாத்மாராமம் முதிதவதனம் தக்ஷிணாமூர்த்தி மீடே ॥** தொடர்ந்து இன்றுள்ள ஆசார்யர்கள் வரையிலுள்ள அத்வைத ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகர்களான ஆசார்யர்களை நமஸ்கரிக்கிறோம்.

*ஸ்ரீ ஆதிசங்கரபகவத்பாதர் சிவானந்த லஹரியில்* ***சம்போலோககுரோ மதீயமநஸ: ஸௌக்யோபதேசம் குரு லோககுருவானஹே சம்போ !*** *மனதிற்கு மேலான சுகத்தைத் தரும் நல்லுபதேசத்தை அருள்வீராக என்கிறார். ப்ரச்நோத்தர ரத்னமாலிக விலும் யார் குரு என்ற கேள்விக்கு பரமேச்வரனே குரு என்று பதிலளிக்கிறார்.*

***ஸம்ப்ராப்தா ப்ரஹ்ம வித்யாஸா***
***யேப்யோ ப்ரஹ்மவாதிப்ய : ।***
***பாரம்பர்யக்ரமேணஸம்ப்ராப்தா***
***தேப்யோநம: பரமரிஷிப்ய: ।।***

*தங்களிடமிருந்து வேறு படாததாயிருக்கும் ப்ரம்மத்தை அறிந்த ப்ரம்ம நிஷ்டர்களிடமிருந்து ப்ரம்மவித்யையைக் குருமுகமாகப் பெற்ற ப்ரம்ம வாதிகள் மூலம் குருசிஷ்ய பரம்பரை வாயிலாக ப்ரம்ம வித்யையை அறிந்த பரமரிஷிகளுக்கும், ரிஷிபரம்பரைக்கும் நமஸ்காரம் என்பது பகவத்பாதர் வாக்கு. சிவரஹஸ்யத்தின் ஆறாவது அம்சமாக மிளிரும்* ***'ரிபு கீதை*** *வ்யாஸர் வேதாந்த ஸூத்ரங்கள் எனப்படும். ப்ரம்ம ஸூத்ரத்தை பரமேச்வரனிடமிருந்து பெற்றதாகக் கூறுகிறது.* ***கைலாஸம் ஸமவாப்ய சங்கர பதத்யானேன ஸூத்ரான் உமாகாந்தாத் ப்ராப்ய விதந்வதேஸ்வதியா பரம சாம்பவரான*** *வியாஸ முனிவர் திருக்கயிலை சென்று பரமனைத் தியானித்து உமா காந்தனான அவரிடமிருந்தே வேதாந்த ஸூத்ரங்களைப் பெற்று விளக்கமெழுதினார்' பத்ம புராணாந்தர்கதமான சக்கரவர்த்தித் திருமகனான ராமபிரான் பொருட்டுச் சொல்லப்பட்ட சிவகீதையும் பரமேச்வரனை ஆதி குருவாகக் காட்டிக் கொடுக்கிறது.* ***'கைவல்யம் லபதே மர்த்ய' கிந்து ஞானேன கேவலம் கேவல ஞானம்*** *ஒன்றினாலேயே மனிதன் முக்தியடைகிறான்.*

*மார்க்கண்டேய புராணத்தில் வரும் ஈச்வரகீதை அத்வைத விக்ஞானமே ஈச்வர ஸம்மதமான தர்சனம் என்று எடுத்துக் காட்டுகிறது.* ***'ஸர்வம் ப்ரஹ்மைவ நாநாத்வம் நாஸ்தீதி நிகமாஜகு: பரமார்த்த ஸாரபூதம் யத்தத் அத்வைத மசேஷத:'*** *என்ற விஷ்ணு புராண வசனத்தின்படி மிச்சம் மீதியின்றி எல்லா சாஸ்திரங்களின் பரமார்த்த ஸாரம் அத்வைதமே என்பதால் எல்லா ப்ராசீனஸம்பிரதாய பிரவர்த்தகர்களான மகரிஷிகள் அனைவரும் ஈச்வர உபதேசத்தை அனுசரித்து அத்வைத விக்ஞானத்தை போதித்தனர்.* ***'அத்வைத ஏவ ச்ருதிசிகர கிராமாகமாநாஞ்ச நிஷ்டா ஸாகம் ஸர்வை: புராணை:'*** *ச்ருதி ஸ்மிருதி, இதிஹாஸ புராணங்கள் முதலான எல்லா சாஸ்திரங்களின் தாத்பர்யமும்* ***'அத்வைதமே'*** *என்பது ஸ்ரீமத் அப்பைய தீக்ஷிதரின் தீர்மானம்.*

*இவ்வாறு எல்லா சாஸ்திரங்களின் உறுதியான முடிவு அத்வைதமாக இருக்க கபிலர், கௌதமர், கணாத ஜைமினி போன்ற பல ஆச்சார்யர்கள் ஏன் த்வைதவாதம் கூறினர்?*

பூர்வீமாம்ஸை உரையெழுதிய சபரஸ்வாமி முதற்கொண்டு அனைவரும் **'ந புத்தி பேதம் ஜனயேத் அக்ஞானாம் கர்மஸங்கினாம்'** - ஞானம் பெறாதவர்களாகவும், சரீரேந்திரியங்களில் நான் எனது என்று பற்று கொண்டவர்களாகவும், கர்மங்களில் ஈடுபாடு உடையவர்களாகவும் இருக்கின்றவர்களிடம், **'ஜகந்மித்யா ப்ரம்மைவஸத்யம்'** 'உலகம் பொய் ப்ரம்மமே ஸத்யம்' என்ற தத்துவத்தை உபதேசித்து அறிவுக் குழப்பத்தை ஏற்படுத்தக் கூடாது என்ற பகவத் வாக்கியத்தில் உள்ள நியாயத்தைக் கருத்தில் கொண்டு கர்ம மார்க்கத்திற்கு முதலிடம் கொடுத்து சமூகம் வைதிக நெறியிலிருந்து பிறழாமலிருக்கும் படிக்காத்த இக்கருத்தை சபரஸ்வாமியின் பாஷ்யத்திற்கு ப்ருஹதீ எனும் உரையெழுதி ப்ரபாகராச்சாரியார் தனது உரையில் தெளிவுரக் கூறியுள்ளார்.

இத்தகைய அத்வைத விக்ஞானத்திற்குப் பரமேச்வரனே ஆதி ஆசார்யனாக இருப்பதால் தக்ஷிணாமூர்த்தி சொரூபத்தில் கல்லால் மரத்தின் கீழ் அமர்ந்திருக்கும் இவரை போற்றித் துதிக்கிறோம். எல்லா உலகங்களுக்கும் குருவாக இருப்பவரும் பிறவிப் பிணிக்கு அருமருந்தாயிருப்பவரும் எல்லா வித்யைகளுக்கும் ஒரே இருப்பிடமாகவுமுள்ள மோனத்தால் ஞானத்தை விளக்கும் இவரை நமஸ்கரிக்கிறோம்.

**குரவே ஸர்வலோகானாம் பிஷஜே பவரோகினாம் ।**
**நிதயே ஸர்வ வித்யாநாம் ஸ்ரீதக்ஷிணாமூர்த்தயே நம: ।।**

மஹத்தான பெருமை வாய்ந்த அத்வைத விக்ஞான ஆசார்யர்களின் அருமை பெருமைகள் பற்றி தொடர்ந்து வரும் இதழ்களில் காண்போம்.

இனி கவலை வேண்டாம். 50, 70, வருடங்களுக்கு முன் உள்ள பழைய
(Reprint or Letterpress Books)
**ஸம்ஸ்க்ருத, தமிழ், க்ரந்தம், கந்நடம், தெலுங்கு,** etc.
ஆகிய எல்லா மொழிகளிலுள்ள புத்தகங்களை
புதிய Fontல் அச்சிட்டுதரப்படும்.
(Without Re-typeing, no proof reading)
விவரங்களுக்கு : **V.K.N. Enterprises, Mylapore,**
**Chennai-600004, Cell : 9840217036, vknprinter@gmail.com**
We reprint old books without retyping ! Books of 50,70 etc. years can be reprinted with new fonts in all languages.
Sanskrit, Tamil, Grantham, Telugu, English, Kannada, Malayalam, Hindi etc.
Contact above address.

# அத்வைத ஆச்சார்ய பரம்பரை 2

**நாராயணம் பத்மபுவம் வசிஷ்டம்**
**சக்திம் ச தத்புத்ர பராசரம் ச ।**
**வ்யாஸம் சுகம் கௌடபதம் மஹாந்தம்**
**கோவிந்த - யோகீந்த்ரம் அதாஸ்ய சிஷ்யம் ॥**

*ஸதாசிவரிடமிருந்து வெளிப்பட்ட பிரஹ்மவித்யை பிதாபுத்ர பரம்பரையில் பகவான் நாராயணரிடமிருந்து துவங்கி வருகிறது. பகவான் நாராயணரைத் தொடர்ந்து அவரது உந்தி கமலத்தில் உதித்த பிரம்மா அந்த வித்யையை பகவானிடமிருந்தே பெற்றார். தான் பெற்ற வித்யையை தனது மானஸ குமாரரான வசிஷ்டருக்குச் சொன்னார். வசிஷ்டர் தனது குமாரனான சக்திக்கும்,சக்தி தனது புத்ரரான பராசரருக்கும் சொன்னார்கள். பராசரர் இந்த ப்ரஹ்ம வித்யையைத் தன் குமாரரான க்ருஷ்ணத்வைபாயனர் என்றழைக்கப்படும் வியாஸருக்குச் சொன்னார். வியாஸர் தன் மகனான சுகருக்குச் சொன்னார். இவருடன் ரிஷி புத்ர வம்ச பரம்பரை முடிந்து விடுகிறது. சதாசிவர், நாராயணர், ப்ரும்மா என்ற தேவ பரம்பரை. வசிஷ்டரில் துவங்கி சுகருடன் ரிஷி பரம்பரை நிறைவடைகிறது. கௌட பாதரிலிருந்து சிஷ்ய பரம்பரை அல்லது மானவ பரம்பரை ஆரம்பமாகிறது.*

*கௌடபாதர் சுகரிடம் சிஷ்யராகி இந்த வித்யையை கிரஹித்தார். கௌடபாதரிடமிருந்து அவர் சிஷ்யர் கோவிந்த பகவத்பாதர் கற்றார். பிறகு கோவிந்த பகவத்பாதரிடம் சிஷ்யராகி ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதர் ப்ரஹ்ம வித்யையை ஸ்வீகரித்துக் கொண்டு தனது சிஷ்யர்கள் மூலம் உலகில் பிரபலப் படுத்தினார். இவ்வாறு குரு சிஷ்ய பரம்பரையில் தொடர்ந்த அத்வைத ப்ரஹ்ம வித்தையை 2500 வருடங்களுக்கும் மேலாக இப்பாரத தேசத்தில் வாழையடி வாழையென இந்த ஆசார்ய பரம்பரையின் மூலம் தொய்வின்றி காப்பாற்றப்பட்டு வருகிறது.*

*பகவான் நாராணர் தனது பரத்வ திசையிலும், கீழிறங்கி மத்ஸ்ய கூர்மாதி அவதாரங்கள் செய்த காலத்தும் அத்வைத தத்வ போதாசார்யராகவே காணப்படுகிறார். பரத்வ தசையில் ஸனகாதி முனிவர்களுக்கும், ப்ரும்மா முதலான தேவர்களுக்கும் அவதார காலங்களில் மனு முதலான பிரஜாபதிகளுக்கும், மானவ ரிஷிகளுக்கும் தத்வோபதேசம் செய்வதை வேதம் துவங்கி எல்லா சாஸ்திரங்களும், பரக்கப் பேசுகின்றன. மத்ஸ்ய, கூர்ம, வராஹ, ந்ருஸிம்மாவதாரங்களில் வைவஸ்த மனு, தேவர்கள், அஸுரர்கள் போன்றோருக்கு உபதேசித்தார். வாமன ராமகிருஷ்ணாதி அவதாரங்களில் உபதேசித்ததோடு நிற்காமல் அத்வைத விக்ஞானத்தை வாழ்வில் நடைமுறைப் படுத்த முடியும் என்று வாழ்ந்து காண்பித்தார்.*

*பகவத் கீதையில் பளிச்சென எடுத்துக் கூறினார்.*

**இமம் விவஸ்வதே யோகம்**
**ப்ரோக்தவான் அஹமவ்யயம் ।**
**விவஸ்வான் மனவே ப்ராஹ**
**மனுரிக்ஷ்வாகவேஸ்ப்ரவீத் ।।**
**ஏவம் பரம்பரா - ப்ராப்தம்**
**இமம் ராஜர்ஷயோ விது: ।।**

*'உபாயமாக இருக்கும் கர்ம யோக நிஷ்டையும், அடையப்பட வேண்டிய ஞானயோக நிஷ்டையும் முன்னர் என்னால் சூரியனுக்குச் சொல்லப்பட்டன. சூர்யன் எவன் குமாரனான மனுவுக்குச் சொன்னான். மனு தன் குமாரனான இக்ஷ்வாகுவுக்குச் சொன்னான். இவ்வாறு ராஜரிஷிகளின் பரம்பரையில் இந்த வித்யை வந்துள்ளது' என்ற பகவத் வசனம் வேதாந்த வித்யைக்கு, நாராயணனே ஆதிபுருஷன் என்று நிரூபிக்கிறது. வேதாந்த வித்யையை பகவான் நாராயணரே பிரகாசப்படுத்தினார் என்று ஸ்ரீமத் பகாவதமும் கூறுகிறது.*

**ப்ராக் கல்ப-ஸம்ப்லவ-விநஷ்டமிஹாத்மததவம்**
**ஸம்யக்ஜகாத முனயோ யதசக்ஷதாத்மன் ।।**

*முந்தின கல்பத்தின் ப்ரளயத்தில் குருசிஷ்ய ஸம்ப்ரதாயமின்றி நஷ்டமாகிப் போன ஆத்ம தத்துவத்தை இந்த கல்பத்தில் ஸனகாதி முனிவர்களுக்குத் தெளிவாக உபதேசித்தார். இதைச் சொன்ன மாத்திரத்திலே முனிவர்கள் மனதில் தெளிவாகக் கண்டு கொண்டனர்.*

*மேலும் இவரே ரிஷப யோகியாக அவதரிதார்.* ***'யோ வை சசரா ஸமத்ருக் ஜடயோகசர்யாம் யத் பாரமஹம்ஸ்யம்ருக்ஷய: பதமாமனந்தி ஸ்வஸ்த: ப்ரசாந்தகரண: பரிமுக்தஸங்க:'*** *இந்த அவதாரத்தின் மூலம் முன்சொன்ன பரமஹம்ஸர்களுக்குரிய ஆத்ம வித்யையை நடைமுறைப்படுத்தி வாழ்ந்து காண்பித்தார். எல்லா நாட்டங்களும் பற்றுகளுமற்று தன் சொந்த சொரூபத்தில் நிலை பெற்றவராய் ஸம த்ருஷ்டியுடன் பரம ஹம்ஸர்களின் யோக வாழ்வு இத்தகையது தான் என்று ஜடன் போல் அனுஷ்டித்து வாழ்ந்து காட்டினார். பிறிதொரு சமயத்தில் ஹம்ஸரூபியாக அவதரித்து நாரதருக்கு பகவானைச் சரண் புகுந்தவர்களால் எளிதில் அறியக் கூடியதும், ஆத்ம தத்துவத்தைப் பிரகாசப்படுத்துவதும், ஞானதிற்கு ஸாதனமானதும், பகவானையே விஷயமாகக் கொண்டதுமான பக்தியோகத்தைத் தெளிவாக உபதேசித்தார்.* ***ஞானம் ச பாகவதமாத்ம ஸதத்வ தீபம் யத்வாஸுதேவ சரணா விதுரஞ்ஜஸைவ.***

*இதனாலேயே பீஷ்மர் இவரை குருதம: ஆத்ம வித்யோபதேச ஆசார்யர்களிலேயே மிகவுயர்ந்தவர் என்று கூறினார். இவ்வாறு வேதாந்த வித்யா பிரகடனத்திற்கென்றே பல அவதாரங்களைச் செய்திருக்கிறார் என்பது புலனாகிறது.*

சக்கரவர்த்தித் திருமகனாக அவதரித்த காலத்தில் ஆங்காங்கே அவர் உபதேசித்தவைகளும் சுகத்திலும், துக்கத்திலும், உகலாயத வாழ்விலும் ஆன்ம நிஷ்டையிலும் வேதாந்த விக்ஞானத்தைப் பரக்கப் பேசியுள்ளார். அத்யாத்ம ராமாயணத்தில் வரும் ராமகீதை ஒரு அத்வைதக் கருவூலம்.

**ஐக்ய - ஜ்ஞானம் யதோத்பன்னம்**
**மஹாவாக்யேன சாத்மனோ: ।**
**ததா அவித்யா ஸ்வகார்யேன**
**சந்யத்யேவ ந ஸம்சய: ।।**

தத்வ தர்சியான குருவிடமிருந்து மஹாவாக்ய உபதேசம் பெற்ற அளவில் நான் ப்ரமமாகவே இருக்கிறேன் என்ற ஜீவப் ஐக்ய ஞானம் எப்போது உண்டாகிறதோ அப்போதே அவித்யை அதன் செயல்களே கூட இல்லாமல் போய் விடுகிறது. இந்த சந்தேகமே வேண்டாம் என்று லக்ஷ்மணன் ஆத்ம ஞானத்தை உபதேசிக்கும் போது கூறுகிறார். மேலும் கூறுவார்

**‘கதாசிதாத்ம ந ம்ருதோ ந ஜாயதே**
**ந க்ஷீயதே நாபி ச வர்த்தனே ।**
**நிரஸ்தஸர்வாதிசயஸ்ஸுகாத்மக:**
**ஸ்வயம்ப்ரபஸ்ஸர்கதோஸ்யமத் ।।’**

ஆத்மா ஒரு போதும் பிறப்பதில்லை, வளர்வதில்லை, தேய்வதில்லை, இறப்பதுமில்லை. இது எப்போதும் இருக்கும். எங்கும் வியாபித்திருப்பது. சுகவடிவமாக தானே ஒளிர்வது. இது இரண்டற்றது.

ஆனந்த ராமாயணத்திலோ தெரிந்த இடமெல்லாம் வேதாந்தம். இவ்வாறு ராமாவதார காலத்தில் ஆங்காங்கே அத்யயன விக்ஞானத்தைப் பளிச்சிட செய்த ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தில் திருவாய் மலர்ந்த போதெல்லாம் வேதாந்த விக்ஞான மணம் பரப்பியது என்றால் மிகையாகாது. கிருஷ்ணாவதாரத்தில் பகவான் கோபியர்களுடன் பேசும் போதும், நாயகியான ருக்மிணியுடன் பேசும் போதும் அக்ரூரர், உத்தவர், விதுரர், மற்ற மகரிஷிகள் இவர்களுடன் பேசும் போதும் வேதாந்தம் வேறு எதுவும் பேசியதில்ல. கீதாபதேசம் ப்ரஸ்தானத்ரயத்தில் ஒன்றாக அவரை விட்டது. விஷ்ணு புராணம் துவங்கி புராணங்களிலும், பாஞ்சராத்ர வைகாச ஆகமங்களிலும், சிவாகமங்களிலும் பகவதுபதேசமாக அத்வைத ப்ரம்ம வித்யை பல இடங்களில் மறைவாகவும், பல இடங்களில் நேரடியாகவும் உபதேசிக்கப்பட்டிருக்கிறது.

பகவான் நாராயணரிடமிருந்து பிரும்ம தேவர் மூலம் எவ்வாறு ப்ரம்ம வித்யை பிரசாரமாயிற்று என்பதை தொடர்ந்து காண்போம்.

# முகாம் நிகழ்ச்சிகள்

முகாம் நிகழ்ச்சிகள் தொடர்ச்சி..

ஸ்ரீஸ்ரீ பெரியவா 24.11.22 அன்று இரவு முகந்தாவிலிருந்து புறப்பட்டு பேரூர் வந்து சேர்ந்தார்கள். ஸ்ரீஸ்ரீ பெரியவாளுக்கு கிராம மக்களால் மந்தா குடும்பத்தார் தலைமையில் சிறப்பானதொரு வரவேற்பு அளிக்கப்பட்டது. மந்தாவின் க்ருஹத்தில் அமைந்த ஸ்ரீ மடம் முகாமில் மந்தா குடும்பத்தாரால் பாத பூஜைகள் நடைபெற்றன. இந்நிகழ்ச்சிகள் திரு. விஸ்வநாத கோபால கிருஷ்ண சாஸ்திரிகளால் தொகுத்தளிக்கப்பட்டன. பின்னர் ஜகத்குருவின் அனுக்ரஹ பாஷணத்தில் வரவிருக்கும் விழாக்கள் பற்றியும் இதற்கு முன்னர் இக்கிராமத்தில் ஸ்ரீ மடத்தின் முகாம்கள் குறித்தும் விளக்கம் அளித்தார்கள்.

25.11.22 அன்று மூன்று கால பூஜைகள் நடந்தேறின. இதற்கிடையில் ஸ்ரீ மதன கோபால ஸ்வாமி கோவிலில் நடைபெற்ற ருத்ர ஹோமத்தில் கலந்து கொண்டு அனுக்ரஹித்தார்கள்.

26.11.22 அன்று ஸ்ரீஸ்ரீ பெரியவா மூன்று கால பூஜைகள் முடித்து பக்தர்களுக்கு தரிசனம் அளித்தார்கள்.

27.11.22 அன்று மூன்று கால பூஜைகள் முடிந்த பின்னர் ஸ்ரீஸ்ரீ பெரியவா மாலை 4.00 மணியளவில் காணொலி காட்சி வாயிலாக சென்னையில் விஸ்வ இந்து பரிஷித் வேதாந்தம் ஜி அவர்களால் வடிவமைக்கப்பட்ட புத்தகத்தினை வெளியிட்டு அனுக்ரஹ பாஷணம் வழங்கினார்கள். பின்னர் ஸ்ரீஸ்ரீ பெரியவா ஸ்ரீ சந்திரமௌளீஸ்வரர் கோவிலுக்கும், அமலாபுரம் ஸ்ரீ காமாக்ஷி பீடத்திற்கும் விஜயம் செய்தார்கள். இவ்விரு இடங்களிலும் அனுக்ரஹ பாஷணம் அளித்த பின்னர் இரவு 10.30 மணியளவில் முகாம் திரும்பினார்கள்.

பேரூர் முகாமை தொடர்ந்து ஸ்ரீஸ்ரீ பெரியவா 12.12.22 அன்று கங்கலக்குரு முகாமிற்கு எழுந்தருளினார்கள். அருகில் உள்ள க்ஷேத்திரங்களுக்கு விஜயம் செய்தும், முக்கமாலா என்ற இடத்தில் பூமி பூஜையில் கலந்து கொண்டார்கள். கங்கலகுரு கிராமத்தில் அமைந்த சிறு பகுதிகளுக்கும் விஜயம் செய்தார்கள்.

12.12.22 அன்று மூன்று கால பூஜைகள் முடிந்த பின்னர், கோடிப்பள்ளி என்ற இடத்தில் உள்ள சோமேஸ்வர சுவாமி கோவில், ஜனவல்லி என்ற இடத்தில் உள்ள சித்தி விநாயகர் கோவில், முக்தேஸ்வரம் என்னும் இடத்தில் உள்ள முக்தேஸ்வர சுவாமி கோவில் விஜயம் செய்த பின்னர் முக்கமாலா கிராமத்தில் ஸ்ரீ காமாக்ஷி அம்மாள் கோவிலுக்கான பூமி பூஜையிலும் கலந்து கொண்ட பின்னர் கங்கலகுரு கிராமத்திற்கு விஜயம் செய்து அதன் ஒவ்வொரு பகுதிக்கும் அனுக்ரஹம் செய்தார்கள்.

முகாம் கோடிப்பள்ளி என்னும் இடத்திற்கு கோதாவரி நதியை படகுகள் மூலமாக

கடந்து சென்றடைந்தது. ஆந்திர பிரதேச அமைச்சரவையைச் சேர்ந்த அமைச்சர் திரு வேணுகோபால் அவர்கள் இங்குள்ள க்ஷேத்திரங்களுக்கு ஸ்ரீஸ்ரீ பெரியவாளை அழைத்துச் சென்றார்கள். இங்குள்ள க்ஷேத்திரங்களில் ஸ்ரீஸ்ரீ பெரியவாளுக்கு பூர்ண கும்ப மரியாதைகள் வழங்கப்பட்டதுடன், சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டன.

கங்கலக்குரு என்னும் இடத்திற்கு ஸ்ரீஸ்ரீ பெரியவர்கள் விஜயம் செய்து அங்குள்ள மக்களுக்கு அருளாசி வழங்கினார்கள். விஜயம் மாலை 3.00 மணிக்கு துவங்கி இரவு 11.00 மணிக்கு முடிவடைந்தது.

ஸ்ரீ மஹாஸ்வாமிகள் அவர்களின் ஆராதனை

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் 68வது பீடாதிபதி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் அவர்களின் 29வது வார்ஷீக ஆராதனை 20.12.22 செவ்வாய்கிழமையன்று ஸ்ரீ மடம் வளாகத்தில் வைதீக முறைப்படி விசேஷமாக கொண்டாடப்பட்டது. அதற்கு முன்பாக 18.12.22 முதல் மூன்று நாட்கள் சதுர்வேத பாராயணம் வித்வத் சதஸ், நாம சங்கீர்த்தனம், மாலையில் சங்கீத நாத சமர்ப்பணம் முதலிய நடந்தன. ஆராதனை தினத்தன்று காலையில் சுமார் 60 வித்வான்கள் / விதூஷிகள் பங்கேற்ற பஞ்சரத்ன கீர்த்தனைகள் இசைக்கப்பட்டன. மாலையில் ஸ்ரீ பெரியவாள் விக்ரஹம் தங்கரதத்தில் 4 ராஜ வீதிகளில் ஊர்வலமாக அழைத்து வரப்பெற்றது. ஆராதனையிலும் / தங்க ரத ஊர்வத்திலும் திரளான பக்தர்கள் கலந்து கொண்டார்கள்.

அவ்வாறே ஸ்ரீ பெரியவாள் அவர்கள் முகாமிட்டுள்ள கோவூரிலும் ஆராதனை சாஸ்தோத்ரமாக கொண்டாடப்பட்டது. வேத பாராயணம், வித்வத் சதஸ், சங்கீத உபன்யாசங்கள்,கச்சேரிகளும் நடைபெற்றன.

3.1.23 அன்று ஸ்ரீஸ்ரீ பெரியவா மூன்று கால பூஜைகள் முடிந்த பின்னர் பக்தர்களுக்கு தீர்த்த பிரசாதம் வழங்கி அனுக்ரஹித்தார்கள். தனுர் மாத பூஜைகள், ஞாயிற்றுக் கிழமைகளில் சூர்ய நமஸ்காரம், செவ்வாய் கிழமைகளில் தீப பூஜை, சுயம்வர கலா பார்வதி ஸ்லோக படனம் திருமணம் ஆகாத இளைய சமுதாயத்திற்காகவும், பகவத் கீதை பாராயணம், உபந்யாசங்கள், இலக்கிய கலை நிகழ்ச்சிகள் ஆகியவைகள் நடைபெற்று வருகின்றனர். பக்தர்கள் நீண்ட வரிசைகளில் நின்று ஹர ஹர சங்கர, ஜய ஜய சங்கர கரகோஷத்துடன் ஸ்ரீஸ்ரீ பெரியவாளை தரிசனம் செய்து வருகிறார்கள்.

6.1.23 அன்று ஒரு விசேஷ முக்யத்துவம் வாய்ந்த நாளாக ஆருத்ரா தரிசன நாளாக அமையப் பெற்றதாகும். இந்நாளில் அதிகாலை 3.45 மணிக்கு ஸ்ரீஸ்ரீ ஆச்சார்யர்களின் விஸ்வரூப தரிசனத்துடன் துவக்கம் பெற்று ஏகாதச ருத்ர ஜபத்துடன் ஸ்ரீ சந்திரமௌளீஸ்வர இரண்டு கால பூஜை, ஆருத்ரா தரிசன பூஜையாக நடைபெற்றது. வபனத்தை தொடர்ந்து சண்டி ஹோம பூர்ணாஹுதி நடைபெற்று பிரசாதங்கள் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.

இரவு சுக்ரவார பவுர்ணமி பூஜை நடைபெற்றது. தொடர்ந்து பௌர்ணமி சந்திர தர்சனத்துடன் லலிதாசகஸ்ரநாம பாராயணமும் நடைபெற்றது.

# சாணக்ய ஸுபாஷிதம்

## உலக இயல்

### அச்சமில்லை

**உத்யோகே நாஸ்தி தாரித்ரியம் ஜபதோ நாஸ்தி பாதகம்**

**மௌனே ச கலஹோ நாஸ்தி நாஸ்தி ஜாகரிதோ பயம் ॥**

*உத்யோகத்தால் வறுமை இல்லை, ஜபிப்பவனுக்கு பாதகமில்லை, மௌனத்தால் கலஹம் இல்லை, விழித்திருப்பவனுக்கு அச்சமில்லை.*

### உடனடி செய்கை

**கதே சோகோ ந கர்தவ்யோ பவிஷ்யன்னைவ சிந்தயேத்**

**வர்தமானேன காலேன ப்ரவர்த்தந்தே விசக்ஷணா: நச ॥**

*சென்றதை எண்ணி சோகம் வேண்டாம். ஆகப்போவதை சிந்திக்கவும். அறிவாளிகள் நிகழ்காலத்தில் அப்படித்தான் நடப்பர்.*

### விழுமின்

**அனாகத விதாதா ச ப்ரத்யுத்பன்ன மதிஸ்ததா**

**த்வாவைதோ ஸுகமேததே யத்பவிஷ்யோ வினஸ்யதி ॥**

*நாளைக்காக விழிப்புடனிருப்பவன், நிகழ்காலத்தில் விழிப்புடனிருப்பவன், பிழைத்துக் கொள்வார்கள். வரட்டும் பார்த்துக் கொள்ளலாம் என்பவன் அழிவான்.*

### இவைகள் வீண்

**புஸ்தகேஷு ச யா வித்யா பரஹஸ்தேஷு யத்தனம்**

**உத்பன்னேஷு ச கார்யேஷு ந ஸா வித்யா ந தத் தனம் ॥**

*புஸ்தகத்தில் இருக்கும் கல்வியும், இன்னொருவன் கையில் உள்ள தனமும், காலத்தில் பயன் படா அது கல்வியுமல்ல தனமும் அல்ல.*

**தேவை**

**ஸ ஜீவதி குணோ யஸ்ய யஸ்ய தர்ம: ஸ ஜீவதி**

**குணதர்ம விஹீனஸ்ய ஜீவிதம் நிஷ்ப்ரயோஜனம் ॥**

*எவன் குணம் அறம் சார்ந்து வாழ்கிறானோ, அவனே வாழ்கிறான். இவை இல்லாத மனித வாழ்க்கை வீணே.*

**விசாரணை**

**கர்மாயத்தம் பலம் பும்ஸாம் புத்தி: கர்மானுஸாரிணீ**

**ததாபி ஸுதியஸ்சார்யா: ஸுவிசாரணேன குர்வதே ॥**

*கர்மவை ஒட்டி பலங்கள் புத்தி கர்மவை ஒட்டி போகும். அறிவாளிகள் அதனால் தீர விசாரித்து கருமம் செய்வர்.*

**வசீகரணம்**

**யதிஈச்சஸி வசீகர்த்தும் ஜகதேகேன கர்மணா**

**புரா பஞ்சதஸாஸ்யேப்யோ காம் சரந்தீம் நிவாரய ॥**

*உலகம் உன் வசப்பட வேண்டுமா? பதினைந்து இடங்களில் திரியும் இந்த மாட்டை அடக்கி விடு. ( இந்த்ரியங்கள், மனம், புத்தி இவைகள்.)*

**கேள்வி**

**க: கால: கானி மித்ராணி கோ தேஸ; கௌ வ்யயாகமௌ**

**கஸ்யாஹம்? கா ச மே சக்தி: இதி சிந்தியம் முஹுர்முஹு: ॥**

*காலமெது? என் நண்பர்கள் யார்? தேசமெது? லாப நஷ்டம் எவ்வளவு? நான் யார்? என் சக்தி எவ்வளவு? மீண்டும் மீண்டும் சிந்தித்துப் பார்.*

**தூய்மை**

**வாசாம் சௌசம் மன:சௌசம் சௌசம் சேந்த்ரிய நிக்ரஹ:**

**ஸர்வ பூததயா சௌசம் ஏதத் சௌசம் பரார்த்தினாம் நச**

*வாக்கில் தூய்மை, மனத்தில் தூய்மை, இந்த்ரிய நிக்ரஹம் என்னும் தூய்மை உயர்வானவையே. அனைத்துப் ப்ராணிகளிடத்தில் தயை அதிகத் தூய்மையானது.*

(தொடரும்)

ப்ரதீபப் பேழை

# ஸ்ரீ பாலபோத ஸங்க்ரஹம்

ஸ்ரீ சங்கர பகவத்பாதாசார்யார் இயற்றியது

ஸ்ரீமத் அனந்தானந்த ஸ்வாமிகள் தமிழில் எழுதியது

ஸ்ரீ சங்கர பகவத்பாதாசாரியர்கள், வேதாந்தத்தின் நுணுக்கமான கருத்துக்களை ஸம்ஸ்கிருதத்தில் கம்பீரமான நடையில் பல பேரறிஞர்களும் போற்றிப் பயிலும்படியாக அருளியிருக்கிறார்கள்; சாமானிய மனிதர்கள் வேதாந்த அறிவைப் பெறுவதற்கு உதவியாக, மிகவும் எளிய நடையில் **ஸ்ரீ பாலபோத ஸங்க்ரஹம்** இயற்றினார்கள். நம் வாசகர்கள் படித்துப் பயனுற வேண்டுமென்ற கருத்துடன், இதை தமிழில் வெளியிடுகிறோம்.

அத்யாத்ம வித்யையை அடையும் பிரகாரத்தைத் தெரிவிக்கிறோம்.

ஆதிபௌதிகம், ஆதிதைவிகம், ஆத்யாத்மகம் என்னும் தாபத்ரயமாகிய அக்கினியினால் தகிக்கப்பட்டவனும் சகல சாதனங்களோடு கூடியவனுமான ஒரு சிஷ்யன் சம்சாரத்திலிருந்து விரக்தியடைந்தவனாய், குருவைச் சரணமடைந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து விக்ஞாபனம் செய்து கொள்கிறான்.

**சிஷ்யன் :** ஸ்வாமி, எனக்கு இந்தச் சம்சாரத்திலிருந்து நிவிருத்தி ஏற்படும்படி அநுக்கிரகிக்க வேண்டும்.

(புலி, சிங்கம் முதலிய துஷ்ட ஜந்துக்களால் ஏற்படும் துக்கம் ஆதி பௌதிகம் எனப்படும். இடி, புயல், அதிக உஷ்ணம், குளிர், பூதபிசாசங்களால் ஏற்படும் துக்கம் ஆதிதைவிகம் எனப்படும். ஜ்வரம், தலைவலி இந்த மாதிரி சரீரத்தின் ஸ்திதி மாறுதலினால் சரீரத்தில் ஏற்படும் கஷ்டங்கள் ஆத்யாத்மிகம் எனப்படும்)

**குரு :** ஹே சிஷ்ய, உனக்குச் சம்சார நிவிருத்தி ஞானத்தினால்தான் ஏற்படும். சிரவண, மனன, நிதித்யாஸனங்களினால் ஞானம் ஏற்பட்டு அதனால் ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் ஏற்படும்.

**சிஷ்யன் :** சிரவணம் என்றால் என்ன? மனனம் என்றால் என்ன? நிதித்யாஸனம் என்றால் என்ன ? ஸாக்ஷாத்காரம் என்றால் என்ன?

**குரு :** குழந்தாய், சிரவணம் என்றால் உபக்ரமம் (ஆரம்பம்), உபஸம்ஹாரம் (முடிவு) இவைகளின் ஒற்றுமை முதலிய தாத்பரியங்களை அறிந்து

கொள்வதற்கு ஸாதனங்களான வழிகளின் மூலம் சாதன சதுஷ்ட்ய சம்பன்னனானவன் வேதாந்த வாக்கியங்களின் பொருளைக் கேட்டு அறிந்து கொள்வது. (தாத்பர்யத்தை அறிந்து கொள்வதற்குச் சாதனங்கள் ஷட்லிங்கங்கள் என்று சொல்லப்படும். அவையாவன: (1) உபக்ரம உபஸம்ஹார ஐகரூப்யம், (2) அப்யாஸம், (3) அபூர்வதை, (4) பலம், (5) அர்த்தவாதம், (6) உபபத்தி. ஆரம்பத்தில் சொன்னதையே முடிவிலும் சொல்வது என்பது உபக்ரம உபஸம்ஹார ஐகரூப்யம் என்னும் முதலாவது லிங்கம்.

ஒரு விஷயத்தைப் பற்றியே திருப்பித் திருப்பிச் சொல்வது அப்யாஸம் என்னும் இரண்டாவது லிங்கம். இந்த விஷயத்திற்கு இதர ப்ரமாணங்களின் அவசியமில்லாமல் வேதாந்தங்களில் தானே தெரிகிறது என்று சொல்லுவது அபூர்வதை என்னும் மூன்றாவது லிங்கம். இந்த விசாரம் பண்ணினால் இந்தப் பிரயோஜனம் ஏற்படும் என்று சொல்வது பலம் என்னும் நான்காவது லிங்கமாகும். ஒரு விஷயத்தைப் பற்றிப் புகழ்ந்து பேசுவது அர்த்தவாதம் என்னும் ஐந்தாவது லிங்கம். அநேக திருஷ்டாந்தங்களினால் ஒன்றை ஸ்தாபிப்பது உபபத்தி என்னும் ஆறாவது லிங்கமாகும். மனனம் என்றால் சிரவணத்தினால் கேட்டறிந்து கொண்ட விஷயங்களை அப்படி இருக்க முடியுமா என்று யுக்தியினால் விசாரம் செய்வது. மனனத்தினால் த்ருடமாக ஏற்பட்ட விஷயத்தில் மனத்தை ஏகாக்ரமாய் நிறுத்தி, அதில் ஒருவிதமான சம்சயமுமில்லாமல் ஒரே ஸ்திதியில் மனத்தை நிற்கும்படி செய்வது நிதித்யாஸனம் எனப்படும். இம்மாதிரி மனத்தை ஒரே இடத்தில் நிலைத்திருக்கும்படி செய்வது பலிதமானால் அதன் பலமே ஸாக்ஷாத்காரம். இந்த விஷயத்தில் ச்ருதியே, சுத்தப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் ஒருவனுக்கு ஆகிவிட்டால் அவனுடைய ஹ்ருதயத்திலுள்ள முடிச்சுகள் அவிழ்ந்து விடுகின்றன. எல்லா சந்தேகங்களும் சோதிக்கப்பட்டு விடுகின்றன. அவனுடைய கர்மாக்கள் எல்லாம் நசித்துப் போய்விடுகின்றன என்று கூறுகிறது.

**சிஷ்யன் :** ஹே ஸ்வாமி, ஸாதன சதுஷ்ட்யம் என்றால் என்ன?

**குரு :** நித்யாநித்யவஸ்து விவேகம், இஹாமுத்ர பலபோக விராகம், சமாதிஷட்க ஸம்பத்தி; முமுக்ஷுத்வம் இந்நான்கும் ஸாதன சதுஷ்ட்யம் எனப்படும்.

**நித்யாநித்யவஸ்து விவேகம்** என்றால், ஆத்மவஸ்து ஒன்றுதான் நித்யம் (எக்காலத்திலும் இருப்பது), பார்க்கப்படுபவையெல்லாம் அதற்கு விபரீதமானவை, அதாவது அநித்யமானவை என்று புருஷனுக்கு நிச்சயம் ஏற்படுவதே நித்யாநித்யவிவேகம் எனப்படும்.

**இஹாமுத்ர பலபோக விராகம் :-** பிரம்மாதி ஸ்தாவராந்தம் எல்லா விஷயங்களிலும் காக்கையின் மலத்தைக் கண்டால் ஏற்படும் வெறுப்பைப் போல் நிர்மலமான வெறுப்பே இகாமுத்ர பலபோக விராகம் எனப்படும்.

**ஸமாதிஷட்க ஸம்பத்தி** என்றால் சமம், தமம், உபரதி, திதிக்ஷை, ச்ரத்தை, ஸமாதி இந்த ஆறும் சேர்ந்து ஸமாதிஷட்கம் எனப்படும்.

**சமம்** என்றால் எப்போதும் எல்லாவித வாஸனைகளையும் தியாகம் செய்து இருத்தல்.

**தமம்** என்றால் வ்ருத்திகள் வெளியில் செல்லாமல் அவைகளை அடக்குதல்.

**உபரதி** என்றால் விஷயங்களிலிருந்து மனத்தைத் திருப்புவது.

**திதிக்ஷை** என்றால் எப்பேர்ப்பட்ட துக்கங்கள் வந்தாலும் அவைகளைச் சகிக்கும் தன்மை.

ச்ரத்தை என்றால் வேதத்திலும் ஆசார்யர்களுடைய வார்த்தைகளிலும் பக்தியே ச்ரத்தை.

சமாதானம் தன்னுடைய ஒரு குறிப்பிட்ட லக்ஷ்யத்திலேயே சித்தத்தை ஏகாக்ரப்படுத்தி நிறுத்தலே சமாதானம்.

இந்த ஆறும் சேர்ந்து ஸமாதிஷட்கம் எனப்படும்.

**முமுக்ஷுத்வம் :** நான் படும் சம்சார துக்கத்திலிருந்து நிவிருத்தி ஏற்பட்டு எப்போது மோக்ஷம் கிடைக்கும் என்ற த்ருடமான புத்தியே முமுக்ஷுத்வம்.

இம்மாதிரி சாதன சதுஷ்டயங்களோடு கூடினவனுக்கே ப்ரஹ்மாத்மைக்ய ஞானத்தில் அதிகாரம் உண்டு. விசாரம் இல்லாவிடில் ப்ரஹ்மா த்மைக்ய ஞானம் ஏற்படாது. ஆகையினால் விசாரம் அவசியம் செய்ய வேண்டும்

**சிஷ்யன் :** விசாரம் என்றால் என்ன?

**குரு :** ‘நான் யார் ? எனக்கு எதிரில் காணப்படுகிறதே, இதெல்லாம் எப்படி உண்டாயிற்று ? எங்கு லயத்தை அடைகிறது? என்று எக்காலமும்

சாதுக்களுடன் (பெரியோர்களுடன்) விசாரிப்பதே விசாரம் எனப்படும்.

**சிஷ்யன் :** ஹே ஸ்வாமி, எனக்கு விசாரம் என்பது தெரியாது. சாதுக்கள் எங்கு இருக்கிறார்களோ அதுவும் தெரியாது. தாங்களே தங்களது கருணா கடாக்ஷமாகிற ஓடத்தினால் என்னை இந்தச் சம்சாரமென்னும் சமுத்திரத்திலிருந்து கரையேறும் வழியைக் காண்பிக்க வேண்டும்.

**குரு :** ஹே குழந்தாய், என்னிடத்தில் உனக்கு த்ருடமான பக்தி இருக்கும் பக்ஷத்தில் நான் சொல்வதைக் கவனமாய்க் கேள். நீ இந்தத் தேகமல்ல. ஏனெனில் இது ஜடமாயும் உன்னால் பார்க்கப்படுவதாயும் இருக்கிறது. பார்க்கப்படுவதைவிட, பார்ப்பவன் வேறு என்பது நியாயம். தவிரவும் இந்தத் தேகம் அமங்களமானது. அநித்யமானது, விகாரங்களுடன் கூடினது. ஆகையினால்தான் நீ இந்தத் தேகத்தில் இல்லை. நீ சைதன்ய ஸ்வரூபன்.

**சிஷ்யன் :** ஸ்வாமி, நான் தேகம் இல்லையென்றால் தேகத்திற்கு ஏற்படும் சுகதுக்கங்கள் என்னைப் பாதிக்கின்றனவே! ஆகையினால் நான் இந்தத் தேகமாய்த் தான் இருக்க வேண்டும்.

**குரு :** தேகம் ஜடம்.

**சிஷ்யன் :** தேகம் எப்படி ஜடமாகும்? பால்யம் இந்தச் சரீரம் ஒவ்வொரு நாளும் விருத்தியடைந்து வருகிறதே. ஜடமாக இருந்தால் எப்படி விருத்தியடையும்? இப்படியேதான் எல்லாம்.

**குரு :** ஹே சிஷ்ய, தேகத்துடன் நீ தாதாத்ம்ய பாவத்தை (அதுவாக இருக்கும் தன்மையை) அடைவதால்தான் சுகம், துக்கம் இவை தோன்றுகின்றன. எப்படி என்றால் சொல்லுகிறேன் கேள். தனம் கஷ்டமானால் துக்கம் ஏற்படுகிறது. தனம் முதலியவை கிடைத்தால் சுகம் ஏற்படுகிறது. அதனால் திரவியமே ஆத்மாவாக ஆகுமா? அது சுகதுக்கங்களுக்கெல்லாம் காரணமாக ஆகிறது. எப்படி லாபாலாபத்துடன் சம்பந்தப்படுவதால் சுகமும், துக்கமும் ஏற்படுகின்றனவோ அதேபோல் சுகதுக்கத்துடன் தாதாத்ம்யத்தை அடைவதனால் சுகமும், துக்கமும் உண்டாகின்றன. திரவியம் முதலியவைகளைக் காட்டிலும் அதை அநுபவிப்பவன் எப்படி வேறானவனோ (பின்னனோ) அப்படியே தேகத்தைக் காட்டிலும் (தேகத்தையுடைய) நீ வேறானவன் தான். ஜடத்வத்தைப் பற்றிச் சொல்லுகிறேன் கேள். தேகம் வளருகிறது என்ற காரணத்தைக் கொண்டு

தேகத்தை எப்படி ஜடமென்று சொல்லலாம் என்று கேட்கிறாயல்லவா? இது சரியானதல்ல. இது அஸத். ஜடத்திற்கும் விருத்தி ஏற்படும். மணலால் ஆகும் ஒரு வேதிகையில் மேலும், மேலும் மண்ணைச் சேர்க்கச் சேர்க்க அது மேலும் உணர்ந்து ஒரு குட்யம் ஆகிறது. அதனால் மாத்திரம் மிருத்திகை ஜடமல்ல சைதன்யத்தையுடையது என்று செல்லலாமா? அப்படியே அன்னமயமான இந்த சரீரத்தில் மேலும் மேலும் அன்னத்தைப் போட்டுக் கொண்டே இருந்தால் இந்தச் சரீரமும் விருத்தியடைகிறது. விருத்தியடைகிறது என்ற ஒரு காரணத்தால் மாத்திரம் அது ஜடமில்லை என்று சொல்ல முடியாது. தேகம் ஜடம் தான். அது எப்படி அமங்களம் என்பதை விளக்குகிறேன். கேட்பாயாக. (முதல் முதலில்) அது ஜனனம் எடுப்பதை யோசித்துப் பார்த்தாலே தேகத்தின் அமங்களத் தன்மை நன்கு புலப்படும். பார்க்கப்படுதல் என்பது எப்படி என்றால் என்னுடைய சரீரம் கறுப்பாயிருக்கிறது, வெண்மையாய் இருக்கிறது என்று சொல்லும் போதும், என் சரீரம் ஸ்தூலமாய் (பெருத்து) இருக்கிறது. க்ருசமாய் (இளைத்து) இருக்கிறது என்று சொல்லும் போதும் பார்க்கப்படுதல் என்பது ஏற்படுகிறது. அவைகளை அப்படிப் பார்க்கிற நீ த்ரஷ்டா (பார்ப்பவன்) ஆகிறாய். அநித்தியம் என்பது எப்படி என்றால் இந்தச் சரீரத்துக்குப் பிறப்பும், இறப்பும் ஏற்படுவதால் இது அநித்தியமாகிறது. விகாரத் தன்மையுடையது என்பது எப்படி என்றால் இந்தச் சரீரத்துக்கு, பால்யம், யௌவனம், வார்த்தக்யம் முதலிய மாறுதல்கள் ஏற்படுகின்றன. சரீரம் விகாரத்தையுடையதாக ஆகிறது. நீயோ என்றால் எந்தவிதமான விகாரங்கள் அதாவது மாறுதல்களும் இல்லாமல் எப்போதும் ஒரே மாதிரியாய் எப்போதும் அதாவது எல்லாக் காலத்திலும் (நித்தியமாய்) இருப்பவனாக இருக்கிறாய். பால்யத்தில் க்ரீடாஸக்தனாயும் (விளையாட்டில் விருப்பமுள்ளவனாயும்), யௌவனத்தில் விஷயாஸக்தனாயும், வார்த்தக்யத்தில் அநகே விதமான சிந்தனைகள் (கவலைகள்) உடையவனாயும் இருந்தேனே அதே நான் எப்பொழுதும் இருப்பவன் என்று அநுபவிக்கிறாய். அதை யோகிக்கும் போது ஒரு காலத்தில் இருந்த அவஸ்தை (அநித்தியமாய்) எப்போதும் இல்லாததாக ஆகி ஓர் அவஸ்தை மாறி இன்னோர் அவஸ்தை வருகிறது. ஆகையால் இந்த அவஸ்தைக்குள்ளாகிறது, இந்த தேகமே தவிர நீயல்ல. நீ சித்ஸ்வரூபியாய் இம்மூன்று அவஸ்தைகளுக்கும் சாக்ஷியாக இருக்கிறாய். (அந்த அவஸ்தைகளைப் பார்ப்பவனாக இருக்கிறாய்)

# அத்வைதமே பரமரகசியம்

பகவத்பாதர்களுக்குப் பின்னும் பேதவாதக் கொள்கைகள் ஏற்படுவதற்குத் தத்வமுறையிலுள்ள மூல காரணம் யாது? 'பரம் பொருளே மெய்ப் பொருள். உலகம் வெறும் தோற்றம்; அத்தோற்றமும் உண்மையில் அப்பரம்பொருளின் தோற்றமே. தோற்றம் விலகி எல்லாம் பரம்பொருளாய்ப் பிரகாசிப்பதே முக்தி' என்று மறைமுடிகளில் முரசறையப் பெற்ற பரமாத்வைததத்வத்தை ஸ்ரீ பகவத் பாதார்கள் ஈசாம்சமாக சங்கரச் சங்கரஸ் ஸாக்ஷாத் என்றபடி அவதரித்துச் சித்தாந்தம் செய்த பின்னரும், உலகமும் மெய், வேற்றுமையும் தோற்றமன்று, மெய்யே என்னும் பேதவாதத்தைத் தழுவிய வைணவம், சைவம் முதலிய கொள்கைகள் கிளம்புவதற்கு என்ன காரணம்?

காரணமுண்டு. 'பக்குவமில்லாதவர்கள், அதாவது, அனதிகாரிகள் அனேகர் வாய்மாத்திரத்தில் அத்வைதமாம் வேதாந்தம் பேசி அனுஷ்டானத்தில் தாமும் ஏமாறி பிறரையும் ஏமாற்றி விடுவார்களே' என்ற உணர்ச்சியே காரணம். 'ந புத்தி பேதம் ஜனயேத் அஜ்ஞானம் கர்மஸங்கினாம்' என்கிறார் ஸ்ரீ கிருஷ்ண பகவான். 'ஒரே பரம் பொருள் எல்லாமாய் நிறைந்து நிற்கின்றது என்பதே தத்வமாயினும்'' அதை அறியக்கூடாத நிலையிலுள்ளவர்கள் உலக கர்மத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்குங் காலத்தில்'' அவர்களுக்குத் தத்வோபதேசஞ் செய்து அவர்களது புத்தியை மாற்றாதே. அபக்குவிகள் ஞானோபதேசத்தைக் கேட்டால் பிஞ்சிலே பழுத்த வெம்பலாக ஆகிவிடுவார்கள். ஆகையால் அவர்களுடைய விஷயத்திலே தத்வத்தை எப்படியாவது மறைத்து வைப்பதே நலம். அத்தத்வத்தை நிந்தித்தாவது மறைத்தாக வேண்டியிருக்கிறது' அதே பகவான் கீதையின் ஒன்பதாம் அத்தியாயத்தில் அத்வைத தத்வத்தை விளக்குமிடத்து 'இதுவே ராஜவித்யை, இதுவே ராஜகுஹ்யம், இதுவே பவித்ரம், இதுவே உத்தமம்' என்கிறார். ராஜவித்யை என்பதினால் இவ்வித்யையே ராஜாங்கமாக எல்லாவற்றிலும் உயர்வில் அமர்ந்தது என்று விளக்கப்படுகிறது. ஆயினும், இது ராஜகுஹ்யம்; பரம ரஹஸ்யமாய் வைத்து ரக்ஷிக்க வேண்டிய வித்யைகளில் இதே முதன்மையானது. இப்படி, பரமரஹஸ்யமாய் ரக்ஷிக்க வேண்டிய உத்தம வித்யையை, ரஸவாதவித்தையைக் குழந்தைகள் கையாடாமல் ரக்ஷிக்க வேண்டியது அவசியமாயிற்று. அத்தத்வத்திற்குச் சாதனமான மார்க்கங்களையே முடிவென கூற வேண்டியதாயிற்று, அத்தத்வத்தை மறைத்து வைத்தாலும், சாதன மார்க்கத்தைச் சரியாய் அனுஷ்டிக்கும் பொழுது, தத்வம் தானாகவே பிரகாசிக்கும்

தெய்வபக்தியைக் கொண்டு வேதவாதமாக பிற்காலத்தில் உதித்த மதங்களுக்கு, தத்வமுறையில் ஆதாரம் இதுதான்.

இந்த ஆதாரம் பகவத்கீதையில் மாத்திரமே யல்லாமல், ஏனைய மஹான்களினுடைய திருவாக்குகளிலும் நிலைபெற்று நிற்கிறது.

**நிர்வேஷம் பரம் ப்ரஹ்ம ஸாக்ஷாத்கர்(த்)துமநீஸ்வரா : ।**
**யே மந்தா: தேநுகம்ப்யந்தே ஸவிசேஷ நிரூபணை : ।।**

பேதமற்ற பரம்பொருளை அறிந்து கொள்ளும் ஆற்றலில்லாதாருக்காகவே கருணையினாலே பேதத்துடன் கூடிய ஈசுவர தத்வம் நிரூபிக்கப்படுகின்றது. பக்தியில் வேகமாக ஈடுபட்டவர்களுக்கும் பக்தியால் அடையக்கூடிய பயனைக்கூட உதறித் தள்ளுங் குணம் சிலசமயம் ஏற்படும். இவ்வுலகத்திலுள்ள ஒரு கோவிலிலுள்ள மூர்த்தியினிடத்தில் விசேஷமாக ஈடுபட்ட ஒரு அடியார் **'வைகுண்ட வாஸேபி நமே பிலாக்ஷ:'** என்கிறார். சகுணமான வைகுண்ட லோகத்தைவிட தன்னூர்க் கோவிலே அவருக்கப் பெரிதாகத் தோன்றுகிறது. 'உன்னிடம் பக்தி எனக்கிருந்தாற் போதும்.' உன்னால் கொடுக்கப்படும் மோக்ஷம் வேண்டாம்.

அத்வைத நிலையும் வேண்டாம் என்கிறார்கள் பல அடியார்கள். இவ்வித மனோ நிலையே பிற்காலத் தனவாகிய அனேக மதங்களுக்கு உண்மையில் மூலம். 'பக்தி போதும். மோக்ஷம் வேண்டாம்' என்பவர்களுக்கே சுத்தபக்தி உண்மைப் பக்தியாகி அவர்கள் வேண்டாமென்கிற மோக்ஷமாகிற அத்வைத நிலை அவர்கள் அறியாமலேயே அவர்களை அடையும். தான் அறியாமலேயே தனக்குப் பந்தநிவிருத்தியென்னும் மோக்ஷம் கிடைப்பதை **'த்ரியம்பக மந்த்ர'** மென்னும் வேத மந்த்ரம் திருஷ்டாந்தத்தோடு நிரூபிக்கிறது. அரசமரத்துப் பழம் காம்பினின்று விடுபடுகிறது. இதற்கு மாறான முறை. பழம் இருந்தவிடத்திலிருக்க, காம்பு விலகுகிறது. பூமியில் படர்ந்த வெள்ளரிக் கொடியிலுள்ள பூர்ணபக்குவமான வெள்ளரிப் பழத்திற்குத் தன்னிடத்திலிருந்து பந்தம் என்று விலகிற்று என்றுகூடத் தெரியாது. இவ்வெள்ளரிப் பழத்தை திருஷ்டாந்தரமாக வைத்து நிரூபிக்கப்பட்ட மோக்ஷமே அத்வைத மோக்ஷம். இதை நிரூபிப்பதே 'த்ரியம்பக' மந்திரம். இம்முக்திக்காகவே முக்கண்ணனை வழிபடுவது என்று கோஷிக்கிறது இம்மந்திரம்.

சிவம்

# வேதாந்த ஸம்வத்ஸரம்

*ஸ்ரீ சுப்பராய சர்மா*

## இந்த வேதாந்த ஸம்வத்ஸரம் யாருக்காக?

*1.* ***யதிகளுக்கு :*** *எல்லா ஆசைகளையும் விட்டொழித்து ஆத்மஞானத்தையே அடைய தீவிர ஆவலுள்ள சந்நியாசிகளுக்கு* **சம்யக் தர்சன** *(சர்வாத்மபாவம்)த்தின் சுவையைக் கொடுக்கும் புனிதமான நூல்,'***வேதாந்த ஸம்வத்ஸரம்***'.*

*2.* ***வானப்பிரஸ்தருக்கு :*** *சம்சாரத்தை வெறுத்து ஜபம், தபம் முதலிய அனுஷ்டானங்களில் தீவிரமாக இருக்கும் தபஸ்விகளின் மனதில் ஆத்ம தத்துவ விசாரத்தின் மூலம் ஆனந்த அலைகளை எழுப்பும் வேதாந்த ஞான கங்கை '***வேதாந்த ஸம்வத்ஸரம்***'.*

*3.* ***கிரஹஸ்தருக்கு :*** *உலக வாழ்க்கையில் மூழ்கி, சுகதுக்கம், விருப்பு, வெறுப்பு, லாபம், நஷ்டம், மானம், அவமானம் என்னும் பல்வேறு துன்பங்களால் அவதிப்படுபவர்களுக்கு சாந்தியையும், நிம்மதியையும் அளிக்கும் அமைதி நூல், '***வேதாந்த ஸம்வத்ஸரம்***'.*

*4.* ***மகளிர்களுக்கு :*** *வேதமோ, ஸம்ஸ்க்ருத மொழியோ அறியாமல் குடும்பப் பணிகளிலேயே மூழ்கி இருக்கும் பெண்களும் இந்த ஸ்லோகங்களைப் பாராயணம் செய்து அதன் அர்த்தத்தை அனுசந்தானம் செய்வதால் அவர்களுக்கு வாழ்க்கையில் அலுப்பும் விரக்தியும் நீங்கி, உத்ஸாகம், திருப்தி மற்றும் ஆன்மிகத்தில் ஈடுபாடு அளிக்கின்ற* **ஆனந்த கிரந்தம், வேதாந்த ஸம்வத்ஸரம் .**

*5.* ***மாணவர்களுக்கு :*** *தமிழ் கற்கும் மாணவர்களுக்கு வேதாந்த தத்துவங்களின் சுவையையும், ஆவலையும் ஏற்படுத்தி அவர்களுக்கு கல்வியில் ச்ரத்தை, ஈடுபாடு மேலும் குருபக்தி இவற்றை உண்டாக்கும்* **ச்ரத்தா சாதன க்ரந்தம், வேதாந்த ஸம்வத்ஸரம் .**

*6.* ***சொற்பொழிவாளர்களுக்கு :*** *தம் திறமையாலும், ஆழ்ந்த புலமையாலும், உபநிஷத் வேத மந்திரங்களை வேதாந்த அறிவுரைகளாகப் பொழிய உதவும்* **ரஸபாக க்ரந்தம், '***வேதாந்த ஸம்வத்ஸரம்***'***.*

7. **சாதகர்களுக்கு :** ஆன்மிக சாதனையில் செல்லும் சாதகருக்கு, சமதமாதிகள், சத்ய பிரம்மசர்யாதிகள், குருசேவை, புலனடக்கம், ச்ரவண மனன நிதித்யாசங்கள் இவற்றின் இரகசியங்களை எளிய நடையில் சுருக்கமாக உபதேசித்து, அவரவர் சாதனை மார்க்கங்களில் ஆவலை அதிகரிக்கும் **ப்ரோத்ஸாஹக க்ரந்தம்** '**வேதாந்த ஸம்வத்ஸரம்**'.

8. **தத்துவ ஜிஜ்ஞாசுகளுக்கு :** உபநிஷத்துகளில் நிரூபித்திருக்கும் பிரம்ம தத்துவத்தை, உபநிஷத் மந்திரங்கள் மூலமாக சரளமாக தெரிவிக்கும் **வேதாந்த காமதேனு**, '**வேதாந்த ஸம்வத்ஸரம்**'.

9. **முமுக்ஷுகளுக்கு :** தர்க்கம், வாதம், விவாதம் எதுவுமின்றி முமுக்ஷுக்களை ஆத்மஞானத்தின் மூலம் பிறவித் தளையிலிருந்து விடுபடச் செய்யும் **மோக்ஷ க்ரந்தம்**, '**வேதாந்த ஸம்வத்ஸரம்**'.

10. **சம்சாரிகளுக்கு :** அவித்யா காம கர்மரூபமாகியதும் சுகதுக்க மோக ரூபமாகிய பந்தங்களால் ஏற்படும் சம்சாரத்தில் வீழ்ந்து, எப்பொழுதும் துன்பத்தையே அனுபவிக்கும் மனிதர்களை சுலபமாக சம்சார சாகரத்தை தாண்ட வைக்கும் **சம்சார தாரண க்ரந்தம்**, '**வேதாந்த ஸம்வத்ஸரம்**'.

11. **துன்புற்றோர்க்கு :** வாழ்க்கைப் போராட்டத்தில் நொந்து, வெந்து வாடுபவரும் விஷயவாசனைகளால் மனம் அழுக்காகி போகங்களில் மூழ்கி இருப்பவருமான மக்களை விவேக ஞானத்தினால் புனிதமாக்கும் **பாவன க்ரந்தம்**, '**வேதாந்த ஸம்வத்ஸரம்**'.

12. **விமர்சகருக்கு :** வேதாந்தங்களை தீவிரமாக ஆழ்ந்து அத்யயனம் செய்து, பின் தத்துவங்களை சீர்தூக்கி ஆராயும் உபநிஷத் விமர்சகருக்கு பதிநான்கு உபநிஷத்துகளிலிருந்து முன்னூற்றி எண்பத்தி ஐந்து மந்திரங்களை வழங்கும் **வேதாந்த கல்பவ்ருக்ஷம், வேதாந்த ஸம்வத்ஸரம் .**

13. **முதியோர்க்கு :** வாழ்க்கையின் கடைசி கட்டத்தில் இருக்கும் வயது முதிர்ந்தோர்க்கும் தினம் ஒரு பக்கம் படிப்பதால் நிம்மதியும் சாந்தியும் அளிக்கும் **சாந்தி க்ரந்தம்**, '**வேதாந்த ஸம்வத்ஸரம்**'.

14. **லௌகீகர்களுக்கு :** சொத்து, சுகம், வீடு, வாசல் விருந்து, கேளிக்கை, ஆடை ஆபரணங்கள் - என்று வாழும், வேதாந்த வாசனையே இல்லாத சாதாரண

மனிதர்களுக்கு லௌகீக சுகத்தை விட வேறான ஆத்மஞான சுவையை அளிக்கும் **ஸந்த்ருப்திஸந்தர்பண க்ரந்தம், 'வேதாந்த ஸம்வத்ஸரம்'**.

15. **வேதாந்திகளுக்கு :** எப்பொழுதும் வேதாந்த சிந்தனைகளையே செய்து கொண்டும் அதையே கற்பிக்கும் பிறர்க்கும் கற்பிக்கும் வேதாந்திகளுக்கு அனேக வேதாந்த மந்திர இரத்தினங்களைப் பொழியும் **வேதாந்த இரத்தின சாகரம் , 'வேதாந்த ஸம்வத்ஸரம்'**.

16. **பாராயணம் செய்வோர்க்கு :** தினமும் கீதை, ஸஹஸ்ர நாமம் என்று பாராயணம் செய்வோர்க்கு, வேதாந்த பாராயணமும் செய்ய, தினத்திற்கு ஒன்றாக 366 வேதாந்த வாக்கியங்களை அளித்துள்ள **வேதாந்த சிந்தாமணி, வேதாந்த ஸம்வத்ஸரம் .**

17. **ச்லோகப் பிரியர்களுக்கு :** ஸம்ஸ்கிருத மொழியில் ச்லோகங்கள் இயற்றுபவருக்கும், வேதாந்த ச்லோகங்களை தேடி சேகரிப்பவர்களுக்கும், அம்மந்திரங்களை மனனம் செய்பவர்க்கும் அருமையான விருந்தாக அமைந்தது.

**அகர முதல எழுத்தெல்லாம்: ஆதி**
**பகவன் முதற்றே உலகு ।। 1 ।।**

எழுத்துக்கள் அனைத்தும் 'அ' என்னும் என்னும் எழுத்தை முதலாக (காரணமாக) உடையவை. அதுபோல உலகமனைத்தும் கடவுளை முதலாக (காரணமாக) உடையதே ஆகும்.

வடமொழியில், கடவுளைக் குறிக்கும் ஒரெழுத்துச் சொல்லும் 'அ' என்னும் எழுத்து அமைந்துள்ளது.

எழுத்துக்களில் நான் அகரமாக இருக்கிறேன். எல்லா உயிர்களிலும் என்றுமுள்ள விதையாக நான் இருக்கிறேன்.

**ஸ்ரீமத் பகவத்கீதை (10-33)**

சொல்லும் பொருளும் போல் இணைந்திருக்கும் உலகின் தாய் - தந்தையராகிய பார்வதியையும் பரமேச்வரனையும் சொல்லும் பொருளும் விளங்குவதற்காக வணங்குகிறேன்.

**நன்றி: பூஜ்யஸ்ரீ ஓங்காராநந்த ஸ்வாமிகள்**

*ஸ்ரீ கணேச சாரதா சத்குரு தேவதாப்யோ நமோ நம : ।*

*ஓம் ஸர்வாத்மகாய வேதாந்தபாஸ்கராய நம : ।।*

**ஈசாவாஸ்யமிதம் ஸர்வம் நேஹ நானாஸ்தி கிஞ்சன ।**

**ஸத்யம் ஸத்யம் புன : ஸத்யம் ப்ராஹ வேதாந்தபாஸ்கர: 1**

***இந்த உலகம் முழுவதும் பரமாத்மனே ஆகியிருக்கிறது. பரமாத்மாவில் பேதம் எதுவுமில்லை. இது சத்தியம். பரம சத்தியம்.***

# 1. இந்த அண்டம் முழுவதும் பரமாத்மனே

**ஈசாவாஸ்யமிதம் ஸர்வம் யத்கிஞ்ச ஜகத்யாம் ஜகத் ।**

**ஈசாவாஸ்யோபநிஷதம் 1**

***இந்த உலகத்தில் இருக்கக் கூடியவையெல்லாம் பரமாத்மனே என்று தெரிந்து கொள்ள வேண்டும்.***

சகல சாத்திரங்களின் சாரமே **வேதங்கள்.** உலகத்தில் இருக்கக்கூடிய எல்லா தர்மநூல்களுக்கும் மூலமானவை **வேதங்களே**யாகும். இந்த வேதங்களுடைய சாரமே **வேதாந்தம்.** இதுவே '**உபநிஷத்**' என்பதாகும்.

பதிநான்கு உபநிடதங்களில் முதலானதும், முக்கியமானதும் ஆகிய ஈசாவாஸ்யோபநிஷத்தின் முதல் மந்திரம் இதுவாகும். இந்த அண்டம் முழுவதும் பரப்பிரம்மத்தின் சொரூபமாகவே இருக்கிறது. அவித்யையினால் தோன்றும் நாமரூபங்கள் என்கிற உபாதிகளிலிருந்து உலகத்தில் பல்வேறு பேதங்கள், தாரதம்யங்கள், உயர்ந்தவை, தாழ்ந்தவை போன்ற வேறுபாடுகள் நமக்குத் தெரிகின்றன. ஆனால் இவை யாவும் உண்மை அல்ல. எவ்வாறு மகா ஆகாயம் பல்வேறு உபாதிகளினால் பலவித கூறுகளாகத் தோன்றினாலும் அவை யாவும் ஒரே ஆகாயமாக இருப்பது போல் இந்த உலகம் முழுவதும் பூர்ணமான பரப்பிரம்மமாகவே இருக்கிறது. இதுவே ஸகல வேதாந்தங்களின் கருத்து ஆகும்.

# புராணக் கதை

*காஞ்சி வாதூலன்*

இதுவரை நிறைய புராணக் கதைகளைப் பார்த்தோம். தமிழில் சில புராணக் கதைகளைப் பார்ப்போம். திருத்தொண்டர் மாக்கதை என்றும் பெரிய புராணம் என்றும் போற்றி அழைக்கப்படுகிறது. சேக்கிழார் பெருமானால் இயற்றப்பட்டது. சைவர்களுக்கு மிகச் சிறந்த பக்தி நூலாக விளங்குகிறது. ஒரு சில கதைகளைத்தான் எல்லோரும் அறிந்திருப்பர். இதுவரை கேட்காத கதைகளை சொல்வேன் என்று தன் சிஷ்யரிடம் கூறி பௌராணிகர் தொடங்கினார்.

திருக்கோவிலூரைத் தலைநகரமாக் கொண்ட நாடு சேதி நாடு. மலாடார் கோமான் மெய்ப் பொருளாளர் நல்லாட்சியை அளித்தார். சிறந்த சிவ பக்தர். அறம் தவறாமல் சிவனடியார் மனம் அறிந்து அன்பே சிவமாயிருந்து மக்களைக் காத்தார். சிவன் கோவில்களில் தவறாது வழிபாடு நடக்கவும் தன் செல்வங்கள் யாவையும் சிவனடியார்க்குத் தந்தார். சிவக்கோலம் கண்டால் மகிழ்ந்து போற்றுவார். அவரை எதிர்த்து ஒரரசன் பல முறை போரிட்டுத் தோற்று ஓடினான். அவன் உள்ளத்தில் அவரை தோற்கடிக்க உறுதி கொண்டான். போரில் அவரை வீழ்த்த முடியாது, வஞ்சத்தால் வீழ்த்த முடிவு செய்தான். சிவனடியாரைப் போற்றுபவர் அவர் என்பதைத் தெரிந்து கொண்டு அதனால் வீழ்த்த முற்பட்டான். முத்தனாதன் என்பவனாகக் காட்டிக் கொள்ளாமல் சிவ வேஷம் தரித்தான். ஓலைச்சுவடியில் குறுவாள் ஒன்றை மறைத்து வைத்துக் கொண்டான். திருக்கோவிலூரை அடைந்தான்.

அரண்மனைக் காவலரிடம் சொல்லியபின் அரசனின் மெய்க்காப்பாளர் தத்தன் என்பவனிடம் தான் சிவ ஆகப் பொருள் விளங்க வைக்க மன்னனைக் காண வேண்டும் என்று கூறினான். சிவனடியாரைத் தடுக்கக் கூடாது என்பது அரசனின் ஆணையாகையால் தத்தனும் அனுமதி தர அரசன் இருக்குமிடம் அடைந்தான், பொய் வேடத்தான். துயில் கொண்டிருந்த அரசனை அவர் மனைவி எழுப்ப அவரும் பொய் வேடம் தாங்கி வந்த முத்தனாதனை வணங்கி பெரும் பாக்கியம் பெற்றேன் நான் ‘நான் செய்ய வேண்டியது என்ன என்று வினவினான்.

அவனும் சிவனார் ஆகம நூல் உமக்குக் கூற வந்தேன் என்று கூற கூறும் என்று பணிவுடன் அரசன் கூற 'உமக்குத்தான் கூறுவேன் நாமிருவரும் தனியிடத்தில் இருக்க வேண்டும்' என்று கூறினான். அரசனும் தேவியை அனுப்பி பொய் வேடம் பூண்டவனை தவிசு மேல் அமரச் செய்து தான் பூமியில் அமர்ந்து பணிவுடன் குனிந்தார். அதுதான் சமயம் என்று முத்தனாத பொய்யன் மெய்ப்பொருளாளரை குறுவாளால் குத்தினான். அவரது ஆகாகாரம் கேட்டு ஓடிவந்த தத்தன் நடந்ததை ஊகித்து தன் வாளால் முத்தனாதனை வெட்டப் போனான். அரசன் அவனிடம் தத்தா இவர் நம்மவர்' இவரை எல்லைக்கு அப்பால் விழிப்புடன் கொண்டு விடு என்றார்.

இந்த செய்தி மக்களிடம் தீயாகப் பரவியது. அவனைக் கொல்லத் துணிந்தனர் மக்கள். தத்தன் அரசனின் ஆணையைக் கூறி பொய் வேஷதாரியை பத்ரமாக எல்லையில் விட்டு விட்டுத் திரும்பினான். மன்னனிடம் பத்ரமாக அவனை விட்டதாக் சொன்னபின் அரசன் இதேபோல் அன்புடன் சிவனாரின் வழி நீங்கள் நடக்க வேண்டும் என்று கூறி சிவ பதம் அடைந்தார். சிவபெருமானும் உமையுடன் அவருக்குக் காட்சி தந்து அருளினார். **'பகைவருக்கும் அருள் செய்க'** என்னும் தத்துவத்தை இக்கதை உணர்த்தும் என்று கூறி பௌராணிகர் ஓய்ந்தார்.

**கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின் ।। 2 ।।**

*அனைத்தையும் அறிந்தவனுடைய நல்ல திருவடிகளைத் தொழவில்லையெனில் கல்வியினால் ஆகும் பயன் என்ன? (பயன் ஒன்றும் இல்லை என்பது கருத்து)*

*பேரறிவே பரம் பொருள். அவரே உலகையும், உயிர்களையும் அறியும் வாலறிவன். (தூய அறிவுடையவன்)*

***(முண்டகோபநிஷத் 1-1-9)***

*சென்றனவும், இருப்பனவும், வருவனவும் ஆகிய உயிர்களை எல்லாம் நானறிவேன்.* ***(ஸ்ரீமத் பகவத்கீதை 7-26)***

**நன்றி: பூஜ்யஸ்ரீ ஓங்காராநந்த ஸ்வாமிகள்**

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி

டி. வி. ராமசாமிப் பிள்ளை சென்னை



பெரியவாளை தரிசனம் செய்து அனுக்ரஹம் பெற்றவர்கள் நிறைய பேர்.

அதில் நானும் ஒருவனாக இருந்தாலும் அவர் எனக்கு அருள் செய்தது விசேஷமானது.

எனக்கு சொந்த ஊர் கரூர். பெரியவா அங்கு முகாமிட்டிருந்தார்கள். வைத்யர் ராமசர்மா என் நண்பர். சுவாமிகளை வரவேற்கும் குழுவில் அவர் என்னை சேர்த்திருந்தார். ராமசர்மா வாரம் தோறும் ஸத் ஸங்கம் நடத்துவார். அதில் பெரியவர் பேச வேண்டும் என்று அழைக்கச் சென்றிருந்தேன். அதுவே என் முதல் தரிசனம். பின்னர் நான் சென்னைக்கு குடியேறி விட்டேன். நங்கை நல்லூரில் வாசம்.

அங்கிருக்கும் ராஜ ராஜேஸ்வரி அம்மனின் கோயில் கும்பாபிஷேகத் திருப்பணியில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். கும்பாபிஷேகத்திற்கு நன்னாளை குறிக்க ஸ்ரீ ராஜகோபால சுவாமி மூன்று பேரை பெரியவாளிடம் அனுப்பினார். அதில் நானும் ஒருவன். பெரியவா அப்போது கலவையில் இருந்தார். பெரியவா இருந்த குடிசையில் என்னுடன் வந்த நண்பர் வெங்கட்ராமன் அவர்கள் சுவாமிகளிடம்

என்னை அறிமுகம் செய்து வைத்தார். பெரியவாளை இரண்டாம் முறை சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. சுவாமிகளின் அருட்பார்வை கிடைத்தது. அவர் வெங்கட்ராமனிடம் 'இவரை எனக்குத் தெரியும். பெயர் மறந்துவிட்டது' என்றார்கள்.

எனக்கு ஆச்சர்யம். சுமார் 23 வருடங்கள் கழித்து என்னை ஞாபகம் வைத்துக் கொண்டிருப்பது ஞானியால் தான் முடியும். அதன் பின்னர் சமீபத்தில் தர்மீசர் ஆலயத்தின் கும்பாபிஷேகம் 1992இல் நடந்தது. இதற்கு அடியேனையும் நண்பர் ராமசந்த்ரன் என்பவரையும் நங்க நல்லூர் ஹிந்து மிஷன் ட்ரஸ்டி காஞ்சீபுரம் அழைத்துச் சென்றார். அங்கு புதுப் பெரியவர்கள் கும்பாபிஷேகத்திற்கு நன்னாளைக் குறித்து ஆசீர்வதித்தார்கள். பின்பு மக்களுக்குத் தரிசனம் தருவதற்கு மகா பெரியவர் இருந்த இடத்திற்கு ச் சென்றோம். வரிசையில் நின்று நானும் என் மனைவியும் உள்ளம் குளிர அவரை ஸேவிக்கும் பாக்யம் கிடைத்தது. ஸ்வாமிகள் தமது உதவியாளரிடம் என்னை யார் என்று விசாரிக்கும்படியாகக் கட்டளையிட்டார்கள். உதவியாளர் என்னை அணுகி பெரியவரின் விருப்பத்தைத் தெரிவித்தார். அப்போது என் மன நிலையை எப்படிச் சொல்வேன். இம்மாமுனிவரின் அருள் நமக்கு எப்போதும் கிடைக்க வேண்டும் என்று ப்ரார்த்தனை செய்தேன்.

**மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடுவாழ் வார் ॥ 3 ॥**

உள்ளமாகிய (தாமரை) மலரில் எப்பொழுதும் இருக்கின்ற (இறைவனுடைய) மாண்புடைய திருவடிகளை த்யானிப்பதன் மூலம் கடவுளை இடைவிடாது நினைத்துக் கொண்டிருப்பவர்கள் (பேரின்பமாகிய) நிலத்தில் எப்பொழுதும் வாழ்வார்கள் (இருப்பார்கள்).

ஒருவன் தனது இதயத்தில் ஆத்ம ஸ்வரூபமான ஈச்வரனைக் கண்டதும், இதயத்தின் முடிச்சு அவிழ்கிறது. எல்லா சந்தேகங்களும் மறைகின்றன. அவனுடைய கர்மங்கள் நசிந்து போகின்றன. **(ஸ்ரீமத் பாகவதம் 1-2-21)**

எல்லோருடைய உள்ளத்திலும் நான் நன்கு வீற்றிருக்கிறேன்.

**(ஸ்ரீமத் பகவத்கீதை 15-15)**

**நன்றி: பூஜ்யஸ்ரீ ஓங்காரானந்த ஸ்வாமிகள்**

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலம் மட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம்.
**டாக்டர். வே. ராகவன்** - தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம். மொழி பெயர்ப்பாளர் : **ஜயவிஜயா**

## கடோத்கச யுத்தம் வதம்



*ஜயத்ரதன் அர்ஜுனனால் கொல்லப்பட கடோத்கசன் தன் அரக்க பரிவானர்களுடன் கௌரவர்களுடன் யுத்தம் செய்தான். மகா கோரமான யுத்தமாக இருந்தது. அங்கு எழுந்த புழுதிப் படலத்தில் அனுமானத்தினால்தான் அடையாளம் செய்ய வேண்டியிருந்தது. யுத்தகளம் முழுவதும் உலோகங்களாலும் தீபங்களாலும், கொடூரமாக விளங்கியது. கர்ணன் அன்று கடோத்கசனுடன் போர் புரிய வந்தான். தன் படைகள் அவனால் சிதறி அடிக்கப்பட்டு கொல்லப்படுவதைக் கண்ட த்ருதராஷ்டிரர்களின் புதல்வர்களுக்கு பீதி உண்டாயிற்று. அவர்கள் கர்ணனிடம் உனது விசேஷ ஆயுதமான சக்தியைப் ப்ரயோகம் செய், இந்த அரக்கனைக் கொல்'' என்றார்கள். தான் இதுவரை இந்த்ரனால் கொடுக்கப்பட்டதும் அர்ஜுனனைக் கொல்ல வைத்துக் கொண்டிருப்பதுமான பூஜையில் இருந்த சக்தி ஆயுதத்தை கடோத்கசன் மீது வீச அவனும் வீழ்ந்தான், மடிந்தான்.*

## த்ரோணர் முடிவு

*கடோத்கசன் வீழ மீண்டும் யுத்தம் நடந்தது. த்ரோணரின் யுத்தத்தை சமாளிக்க பாண்டவர்களால் முடியவில்லை. எண்பத்தி ஐந்து வருட கிழவர் பதினாறு வயது பாலன் போல் யுத்தம் செய்தார். பாண்டவர்களின் அச்சத்தைக் கண்டு அர்ஜுனனிடம் க்ருஷ்ணர் கூறினார்.''யுத்தத்தில் த்ரோணரை வெல்வது கடினம். அவர் தன் போர்*

கருவிகளை கீழே என்று வைக்கிறாரோ அன்றுதான் அவரை வெல்ல முடியும். அவர் போரிடாதிருக்க நீங்கள் ஒரு உபாயம் செய்யுங்கள். தன் மகன் அஸ்வத்தாமன் இறந்தான் என்று அவர் கேட்டால் அவர் போரிட மாட்டார். அப்போது நம் கார்யம் சுலபமாகும்''

அர்ஜுனனுக்கு இது பிடிக்கவில்லை. யுதிஷ்டிரர் கஷ்டத்துடன் ஒப்புக் கொண்டார். அந்த சமயத்தில் அஸ்வத்தாமன் என்னும் யானை ஒன்றை பீமன் கொன்றான். உடனே அவன் உரக்க 'அஸ்வத்தாமன் கொல்லப்பட்டான்'' என்று கூவினான். இது ஒரு சதி என்று கருதி த்ரோணர் கோபம் கொப்பளிக்க ப்ரம்மாஸ்திரத்தை உலகை அழிக்க எடுத்துக் கொண்டார். அதைக் கண்ட ரிஷிகள் அக்னியை முன் வைத்துக் கொண்டு அவரிடம் '' த்விஜஸ்ரேஷ்டரே ஏற்கனவே இந்த அதர்ம யுத்தத்தை செய்து கொண்டிருக்கிறீர்கள். ப்ராம்மண தர்மத்திற்கு விரோதமான நடவடிக்கை. உங்களுடைய காலம் முடியப்போகிறது. வேதம் அறிந்த உங்களால் எதுவுமறியாதவர்கள் ப்ரம்மாஸ்த்ரத்தால் அழிக்கப்பட்டுள்ளனர். மீண்டும் அந்த பாபச் செயலைச் செய்யாதீர்கள் '' என்று முறையிட்டனர்.

ரிஷிகளின் பேச்சையும், பீமனின் கோஷத்தையும் கேட்ட த்ரோணர் அச்சத்துடன் எக்காரணம் கொண்டும் பொய் சொல்லாத யுதிஷ்டிரைப் பார்த்து இது உண்மையா? என்று வினவினார். மூவுலகும் பெற்றாலும் பொய்யுரை சொல்லார் என்னும் நம்பிக்கை அவரிடம் இருந்தது. த்ரோணரால் பாண்டவர்கள் அழிக்கப்பட்டு விடுவார்கள் என்று எண்ணி க்ருஷ்ணர் யுதிஷ்டிரரிடம்' தன்னைக் காத்துக் கொள்ள உரைக்கும் பொய் பொய்யாகாது'' என்று கூற அவரும் பொய்யுக்குப் பயந்தும் வெற்றிக்கு விழைவராகி 'ஆம் அஸ்வத்தாமன் கொல்லப்பட்டான்'' என்று உரக்கவும் குஞ்சரம் என்னும் யானை என்று தாழ்ந்த குரலில் கூறினார். அவரும் பொய்யுரைக்க இது காறும் பூமியில் படாமல் சென்று கொண்டிருந்த அவரது தேர் தரையைத் தொட்டது!

கலங்கின த்ரோணர் திகைத்து நின்றார். அவரைப் பார்த்து பீமன் எக்காரணம் கொண்டும் ப்ராம்மணர்கள் ஆயுதம் ஏந்தார். நீங்களோ அதற்கு மாறாக இருக்கிறீர். எல்லாப் ப்ராணிகளுக்கும் அபயம் தர வேண்டிய நீர் ஏன் இப்படி செய்கிறீர்கள் ? என்று கூற அவரும் தன் ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு அங்கேயே யோக ஸமாதியில் ஆழ்ந்தார். பரமாத்வை த்யானம் செய்பவராய் அதனுடன் கலந்தார்!

த்ரோண பர்வம் முற்றும்

# சிவ மான ஸிக பூஜை

ஸதாசிவ ப்ரம்மேந்திரர் அருளியது

எங்கும் இருக்கும் பரமாத்வான சிவனை ஒரு ரூபத்தில் எப்படி பூஜிப்பது என்ற திகைப்பில் எழுந்த ஸ்லோகங்கள் ப்ரம்ம ஞானியான ப்ரம்மேந்த்ரர் தன் அனுபூதியில் அருளியது



अनुचितमनुलपितम् मे त्वयि ननु शम्बो तदागस: शान्त्यै

अर्चाम् कथमपि विहितामन्गीकुरु सर्वमन्गलोपेत ।। १ ।।

A Ý ]u© Ý ¼¨u® ÷© zÁ ° | Ý \®÷£õ uuõP é : \õ¢z ø¯ › Aºa\õ ª Pu©¤ Â î uõ© [ RS ¸ é ºÁ© [ P÷»õ÷£u »

*ஹே ஸம்போ ! உன்னைப் பற்றி பொருத்தமற்றது நிச்சயம் என்னால் பிதற்றப்பட்டது. அக்குற்றத்தின் சாந்திக்காக பார்வதியோடு கூடினவனே நியமமாகச் செய்யும் பூஜையை எப்படியோ ஏற்றுக் கொள்.*

ध्यायामि कथमिव त्वाम् धीवर्त्मविदूरदिव्यमहिमानम्

आवाहनम् विभोस्ते देवाग्रय्य भवेत् प्रभो कुत; स्थानम् ।। २ ।।

z¯õ¯õ ª Pu ª Á zÁõ® wÁºz©Â y µvÆ¯ © î ©õÚ® ›
BÁõ í Ú® Â÷£õ ì ÷u ÷uÁõUµ´ ¯ £÷Áu ¨µ÷£õ Su: ì uõÚ® »

*புத்திமார்க்கத்திற்கு அப்பால் உள்ள உன்னை எப்படி த்யானம் செய்வேன். திவ்ய மகிமை உடைய சிவனே தேவர்களுள் முதல்வனே, தலைவனே எங்கும் வ்யாபித்திருக்கும் உன்னை எப்படி ஓரிடத்தில் ஆவாஹனம் செய்வது?*

कियदासनम् प्रकल्प्यम्क्रुतासनस्यएह सर्वतोपि शिव

पाध्यम् कुतो अर्घ्यमपि वा आपाध्यम् सर्वत्रपाणिपादस्य ॥ ३ ॥

Q¯uõ é Ú® ¨µPÀ¨¨¯® Suõ é Ú ì ÷¯ í éºÁ÷uõ¤ ]Á›
£õz¯® S÷uõ AºU¯©¤ Áõ B£õz¯® éºÁzµ£õ o £õu ì ¯ |»

*சிவனே ! எங்குமிருக்கும் உனக்கு எப்படி ஆஸானம் தருவது! எங்கும் கை, கால்கள் கொண்ட உனக்கு பாத்யமோ, அர்க்யமோ எவ்வாறு ஸமர்ப்பிக்க முடியும் !*

आचमनम् ते स्यादपि भगवनब भव् सर्वतोमुख्स्य कथम्

मधुपर्को वा कथमिह मधुवैरिणी दर्शितप्रसादस्य ॥ ४ ॥

B\©Ú®÷u ì ¯õu¤ £PÁß £Á éºÁ÷uõ•P ì ¯ Pu®›
©x£º÷Põ Áõ Puª í ©xøÁ¸ p uº]u ¨µéõu ì ¯ |»

*பகவானே நீயோ ஸர்வதோ முகன் (எல்லாவிடத்திலும் முகமுடையவன்) உனக்கு ஆசமனம் எப்படி அமையும்? மதுவை அழித்த விஷ்ணுவிற்கு அருளிய சிவனே உனக்கு எப்படி மதுபர்க்கம் பொருந்தும்? (மது தேன் மது என்னும் அரக்கன்).*

स्नानेन किम् विधेयम् सलिलक्रुतेनेह नित्यशुद्दस्य

वस्त्रेणापि न कार्यम् देवादिपते दिगम्रस्येह ॥ ५ ॥

ì Úõ÷ÚÚ Q® Â÷u÷¯® é¼»U¸÷u÷Ú í {z¯ éúzu ì ¯›
Á ì z ÷µn | Põº¯® ÷uÁõv£÷u vP©£µ ì ÷¯ í |»

*நித்யசுத்தனான பரமசிவனே உனக்கு தீர்த்தத்தினால் ஆக வேண்டியது என்ன? தேவாதிபதியே திசைகளையே ஆடையாய் உடைய உனக்கு வஸ்த்ரத்தால் என்ன ஆகப் போகிறது?*